பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
அக்டோபர் 2020



## தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு தமிழ்த்தென்றல்

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | அக்டோபர் 2020

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்
இணையாசிரியர் :
முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி
நிர்வாக ஆசிரியர் :
சஃபி மொஹமெட்
ஆசிரியர் குழு :
ஹிப்ஸீர் ரஹ்மான்
கவிஞர் பாலமுனை பாறூக்
நெல்லை உலகம்மாள்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
ஆலோசகர்கள் :
பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனம் செய்திட, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

நூல்கள் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்
editor@tamilnenjam.com









# நெஞ்சோடு நெஞ்சம்



அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!

‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு’ என்பது வள்ளுவர் வாக்கு. நம்மில் இன்று எத்தனை பேர் செய்நன்றி மறக்காமல் காரியமாற்றுகிறோம் என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

சந்தர்ப்பமறிந்து தக்க தருணத்தில் ஒருவரால் செய்யப்படும் உதவிகளுக்கு நிகரேதுமில்லை. அவற்றை மறவாது, நன்றி பாராட்டுதல் மனிதநேயப் பண்புகளி லொன்றாகும்.

சிலர் நன்றியறிதலை பணத்தால், பொருளால் ஈடுகட்டி விடலாம் எனத் தப்புக்கணக்கு போட்டு விடுவதுமுண்டு. உண்மையில் இது மனமுறிவுக்குத்தான் வழிவகுக்கும்.

சிலர் தம் தேவைக்கேற்ப நட்பு பாராட்டி விட்டுத், தம் தேவைகள் தீர்ந்தபின் தள்ளி வைத்துப் போய் விடுவதுமுண்டு. இவர்கள் சுயநலவாதிகளே! ஆயினும், பொதுநலனை நாடுபவர்களோ தம்மை எப்போதும் பொதுப்பணியில் ஈடுபடுத்தி, எந்தப் பிரதி பலனையும் எதிர்பாராது தொடர்ந்து தேவைப்படுவோர்க்கு உதவி செய்வார்கள். இது அவர்களின் உயரிய பண்புக்குச் சான்று பகரும்.

பெறும் உதவி துரும்பளவேயாயினும், நன்றி பாராட்டுதல் உறவுப்பாலத்திற்கு உறுதுணையாய் அமையும்.

சிறு வார்த்தைகளாலோ, சிறு செய்கைகளாலோ உங்கள் நன்றியை உணர்வுபூர்வமாக உணர்த்துங்கள்! அதுபோதும். நன்றியுணர்வு என்பதே ஆத்மதிருப்தி தான். அதை மறவாதிருத்தல் நலமே!

நானிலம் சிறக்க நற்பண்பு வளர்ப்போம். எந்நிலையிலும் நன்றி பாராட்டுவோம். நாளைய தலைமுறைக்கும் கற்றுக் கொடுப்போம்.

நன்றி!




தமிழ்நெஞ்சம் அமின்



## கலைமகள்

வெள்ளிய தாமரை வீற்றிருப்பாள் அன்பினால்
உள்ளம் களித்தே உவந்திடுவாள் பண்பினால்
கள்ளமின்றிப் பல்கலைகள் கற்ற அருளிடுவாள்

**இரா மீனாட்சி சுந்தரம்**
கோவை





வெகுநாள் கழித்து
நேற்று தான் காணமுடிந்தது
வீதியில் ..
அந்த அழகான பெண்
லேசான நில நடுக்கம்.

- பாணால்.சாயிராம்.

**பழியுணர்வு மட்டுமே
வாழ்க்கையெனக்கொண்டவர்கள்,
பகைவர் முயற்சியில்லாமலேயே
தமக்குத் தாமே குழிவெட்டிக்கொள்வார்கள்.**

**கலைஞர் மு.க.**



# கெத்துப்பாட்டி..



R. விஜயலட்சுமி

என்ன ஷெண்பகத்தம்மா..இப்படி அமைதியா திண்ணைல உக்காந்துட்டீங்க...

ஆமா அஞ்சல...வேல முடிஞ்சிருச்சு.. இன்னைக்கு ஷட்டவுனாமில்ல..கரண்ட்டு இல்ல.டிவிபாக்கவுடாமபண்ணிட்டாய்ங்க.. ஃபேனும் சுத்தல அதான் வெளில வந்து உக்காந்து கிடக்கேன்..

அதுசரி உனக்கென்னகுறச்சலு

மவராசி ஏழு புள்ளைங்கள பெத்து வளத்து கரை சேத்துட்டு சாலியா உக்காந்து கெடக்க...

நான் ரெண்டு தான் பெத்தேன்... ஒன்னும் செரியில்ல. எனக்கு புருஷன்னு ஒன்னு வாச்சிருக்கே.. சொல்ல வேணாம்..

ஏண்டி அஞ்சல... உன் புருஷன கொற சொல்லாம இருக்க மாட்டியா.. அவனும் உனக்கு உழைச்சு கொட்டிக் கிட்டு கிடக்கான்.

உன் பிள்ளை ங்கள நீ ஒழுங்கா வளக்கல அதுக்கு அவன் என்ன செய்வான் சொல்லு...

அதுவும் சரிதான்.. ஆமா ஷெண்பகத் தம்மா உன் கடைசி புள்ள அஞ்சு வயசாகும் போது உன் வூட்டுக்காரரு செத்து போயிட்டாரு..

அப்பறம் 5 பசங்க 2 பொட்ட புள்ளைங்களபெரியபெரியபடிப்பெல்லாம் எப்படித்தான் படிக்க வச்சியோ...

என்னத்த சொல்ல.. வயலு வேல, கூலி வேலைக்கு போயி நெல்ல வித்து பெரியவன இஞ்சினியருக்கு படிக்க வச்சேன்.. 2 வது பயலுக்கு அவுக அப்பா பாத்த மில் வேலய கொடுத்தாக..அப்பறம் அவங்க ரெண்டு பேரு சம்பாத்தியத்துல.. நானும் வேலைக்கு போயி சம்பாதிச்சு மத்த புள்ளைங்கள படிக்க வச்சேன் 2 பொம்பள புள்ளைகளும் டீச்சர் வேல...

பசங்களுக்கும் நல்ல வேல கிடைச்சி கல்யாணம் கட்டி ஒவ்வொரு த்தனும்.. ஒவ்வொரு ஊர்ல இருக்கானுங்க..ம்

ஆமாமா தீவாளிக்கு,பொங்கலுக்கு அவங்க ஐயன் இறந்த நாளுக்கு புள்ளைக் குட்டி பேரன் பேத்தினு ஊடே நிறஞ்சி கிடக்கும்..

நீதான் தெருவுல நாங்கள் லாம் கண்ணு வச்சிருவோன்னு திட்டி கழிச்சு முச்சந்தில போடுவீயே.. க்கும் என்று தாவாங் கட்டையில் குத்தி காட்டினாள் அஞ்சல...

ஆமாண்டி அஞ்சல..உம்புள்ளைங்க சரியில்லனு நீ இங்க வந்து முணவற மாதிரி எத்தன பேரு முணவறாளுவளோ அதான்.. அது சரி ராசா கணக்கா புள்ளைங்க காருல வருதுகளே நீ அவுக வூட்ல போய் இருக்கலாம் ல..

ஏன் இங்க சமச்சும் சமைக்காமலும் தின்னும் திங்காம தனியா கெடந்து காயுறவ..

அதெல்லாம் நமக்கு சரிப்படாது.. அஞ்சல நம்ம வூட்ல இருக்கறதுதான் நமக்கு மருவாதி..

இப்ப பாரு நல்லது கெட்டதுன்னா எல்லா பயலும் பேரன் பேத்தியோட இங்க வந்து என்ன பாத்துட்டு போகுதுங்க.. நானும் கெத்தா திரியுறேன்

இப்ப என்ன போனை போட்டு பேசிக்குறோம்.. எம்புருஷனோட நான் வாழ்ந்து புள்ளைங்கள பெத்த இந்த வூட்ல அவுக நினப்பு கூடவே இருக்கு..தனியா இருக்க மாதிரி தெரியல..

ஆமாமா ஷெண்பகத்தம்மா நீ எப்பவுமே கெத்துதான்..நாள் வாரேன் பொழப்பு கிடக்கு..

கெத்து பாட்டி தெருவுல போற அடுத்த பார்ட்டிக்காக வெயிட்டிங்.. ■

# தமிழை (வி)சுவாசிப்போம்

தமிழ்
அழகின் குழந்தை
மொழிகளின் அன்னை.

அழகே பெயரான
அழகு

மென்மை வண்ணத்தில்
உண்மை பேசும் மேன்மை

புதிதாகிக் கொண்டே
இருக்கும் பழமை.

தமிழ் -
பேசப் பேச
நா இனிக்கும்
நெஞ்சம் சிலிர்க்கும்
உயிர் துளிர்க்கும்.

தென்றலைப் பதமாக்கி
தேகமாய்ச் சமைத்து
சந்தனம் குழைத்து
வசந்த வா(க )னத்தில்
பவனிவரும்
சுக(ந்த) மொழி.

அறிவுப்பசிக்கு
அறுசுவை
விருந்து தரும்
அற்புத மொழி.

ஆபரணங்கள் கோடி
அணியாத தோழி.

உலக மொழிகளுக்கு
சொற்களைக்
கொடுத்து கொடுத்துச்
சிவந்து போனதால்
தமிழ்
செம்மொழி.

மொழிகள் அனைத்தும்
தமிழ் அன்னையிடம்
அமுதருந்தியதால்
தமிழ்
நம் தாய்மொழி மட்டுமல்ல
அது
மொழிகளின் தாய்மொழி.

மொழிகள் வளர்ந்தால்
தமிழ்
முதலாய் வளரும்

மொழிகள் அழிந்தால்
தமிழ்
இறுதிவரை வாழும்.

மெல்லத் தமிழ் இனி
வெல்லம் ஆகும் கனி.

தமிழை நேசிப்போம்
தமிழை வாசிப்போம்
தமிழை சுவாசிப்போம்
தமிழை விசுவாசிப்போம்.

**- கேப்டன் யாசீன்**

# நிழல்

நினைவுகளை
சில சமயம் அழித்து செல்கிறது
நிகழ்வுகள்...

நிஜத்தை மறக்க
சில சமயம் தேவைப்படுகிறது
நினைவுகள்...

நிஜத்தின் நிழலை
பிம்பமாய் காட்ட
நினைவின் நிழலால்தான் முடியும்...

நினைவோ... நிஜமோ...
இரண்டையும் கொத்தி
தின்றுவிடுகிறது
சில நிகழ்வுகள்!!!

**ஜீவா**
கோயம்பத்தூர்



# தவிப்பின் தனி இதம்

உன் ஆழ்கடல் நெஞ்சத்தில்
மூழ்கி மூழ்கியே கற்கிறேன்
உன்னை நினைக்கும் நெஞ்சம்
அதிகமாக நினைக்கட்டும் என்று...
இருட்டை மீறிச்சீறும்
வெளிச்சக்கோடுகள்
அகன்றவெளியில் துகளாகப் பரவுகிறது
அதில் லேசாகி உயிர்த்துத்
துளாவித் திரிகிறேன்....
மௌனம் உடைந்த தருணம்
ஊற்றுத் துளைகள்
அமைந்திருக்கும் அடைமொழிகளும்
கரைந்து வெளியேறக் காத்திருக்கிறது...
மனதுக்குள் அலங்கரித்த
வினோதங்களை அகற்றிவிட்டு
எளிய பிரமைகளின் வழியே
விட்டுப் போன அர்த்தங்களைத்
திரட்டியே விக்கித்து நிற்கிறேன்
இதுவும் ஒரு தவிப்பின்
தனி இதம் அல்லவா...!!

- வனிதாமனோ
பட்டர்வர்த், மலேசியா

# ராமாயண புராண கதைகளில் இதுவும் ஒன்று

முனிவர்கள் அடுப்பில் பாலை வைத்து காலை கடன்களை முடிக்க போனார்கள். அப்போது மெல்ல கொதித்து கொண்டிருக்கும் பாலில் பாம்பு ஒன்று விழுந்து உயிர் துறந்தது. அதை பார்த்த ஒரு தவளை முனிவர்கள் வரும் பொழுது அவர்கள் கண் முன்னால் பாலில் குதித்து மடிந்தது.

இதை பார்த்த அந்த முனிவர்கள் அந்த பாலை கொட்ட அதில் இறந்த பாம்பின் சடலத்தை கண்டார்கள். தங்களைக் காக்கத்தான் அந்த தவளை பிராணதியாகம் செய்தது என்று அறிந்ததும், அந்த தவளையின் ஆத்மாவிற்கு மிக அழகிய பெண்ணின் உருவத்தை கொடுத்து அவளுக்கு மண்டோதரி என்று பெயர்



சூட்டினர். மண்ட்ஸோரில் (உஜ்ஜையினி பக்கம் உள்ள இடம்) பிறந்ததால் மண்டோதரி என்று பெயர்.

அவள் அந்த முனிவர்களுக்கு பணிவிடை செய்தபடி இருந்தாள். அவர்களின் கச்சையை கூட அலசுவது வழக்கம். ஒரு நாள் தண்ணீர் இல்லாத போது அந்த கச்சைகளை தன் எச்சிலாலும், பல்லாலும் சுத்தம் செய்த போது அதில் இருந்த விந்து அவளுக்குள் போய் அவள் கர்ப்பமுற்றாள்.

அப்போது ராவணன் அங்கு வர, அவளின் அதீத அழகில் மயங்கி அவளை மணம் செய்ய கேட்டான். அவள் கர்ப்பமுற்றதை மறைத்து ராவணனுக்கு மணம் முடிக்கின்றனர் அந்த முனிகள்.

முனிவர்கள் அவளிடம்... "ராவணன் மிதிலை போகிறான். அவன் கர்ஜனை மிக வலிமையானது. மிதிலையில் அவனை கர்ஜிக்க சொல். வெளியே கண்ணுக்கு தெரியாமல் இருக்கும் சிசு, ராவணன் கர்ஜனையில் கீழே விழும். அந்த குழந்தையை நீ பெட்டியில் மூடி வைத்து மறைத்து விடு" என்றனர்.

அதே போல் மண்டோதரி ராவணனை மிதிலையில் கர்ஜிக்க சொல்ல, அவன் கர்ஜித்ததும் கீழே விழுந்த குழந்தையை பெட்டியில் வைத்து மண்ணுக்கு அடியில் வைக்கிறாள். அந்த குழந்தைதான் சீதை. அதனால் சீதையை ராவணின் பெண் என்று வட இந்தியாவில் சில பேர் நம்புகிறார்கள்.

- ஹேமா ஜம்பு



# என் உசுரு நீதானே..!

வெட்டிப் போட்ட உன் நகத்துண்ட...
குட்டி குட்டி எறும்புகள்
இழுத்துப் போக...
எட்டி எட்டி உதைக்குதடி
என்னோட உள்மனசு..!

நீ தலை சீவயில
உதிர்ந்த முடி...
வேலியில சிக்கி இருக்க
அது பார்த்த எம் மனசு
சீக்கு வந்து கிடக்குதடி..!

உன் தலையில...
வச்ச முல்லையில
ஒன்னு மட்டும் உதிர்ந்து விழ
என் உள்ளங்கையில் உட்கார்ந்து
கனமா கனக்குதடி..!

நீ நடந்து போகையில
உன் காலடிய நான் மிதிச்சா
உள்ளங்காலு வழியாக
ஏதோ ஒன்னு தான் நுழைஞ்சு
உச்சந்தலையில சில்வண்டா
பறக்குதடி..!

உன் வீட்டு பசுமாட்ட
நீ உச்சி முகர்ந்து
கொஞ்சும் போது
என்னோட உச்சி முழுவதும்
சிலிர் சிலிர்த்து நிக்குதடி..!

உன் தங்கையோட கையபுடிச்சு
நீ சிரித்து பேசும் போது
ஓரமாய் நான் நிற்க
உன்னோட முகம் பார்த்து
என் கண்கள் ரசிக்குதடி..!

மொத்தத்தில என் உள்ளம்
உன்னையே தேடுதடி
நீ போகும் பாதையெல்லாம்
என் உசுரு சுத்துதடி..!

- சீனு_செந்தில்
காட்டுமன்னார்கோயில்.



# காதல் சங்கீதமே

உச்சந்தலை வருடி உரசும் காற்றில்
அருகினில் வந்து உரையாடி உறவாகி
வெட்கம் பூசி முகமது சிவக்க
வில்லாய் வளைக் கரம் வளைத்து
பிறைநுதல் தொட்டு திலகம் தீட்டி
விரல் தீண்ட விரதமும் தீரும்
சுவாசக் காற்றே தேவை இல்லை
மூச்சாய் என்னை சுமக்கும் அன்பே
மனம் தொடும் காதல் சங்கீதமாய்
இயல் இசையை என்னுள் மீட்டுகிறாய்நீ !

**ச.ஜெயலட்சுமி**



# வரலாறு

பாவலர் சீனி பழனி, எம்., ஏ.,
சென்னை

> செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
> உட்பகை உற்ற குடி (குறள் 887).

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் கதையைக் காப்பியமாக்கினர். ஆனால் அதில்கண்ணகியைப் பற்றியோ கோவலனைப் பற்றியோ எத்தனை வரிகள் பாடப்பட்டுள்ளன என்று பாத்தால் அது மிகவும் சொற்பம் எனலாம்.

தமிழ் மொழியில் எழுதப்பட்ட முதல் காப்பியம் சிலப்பதிகாரம். அது போல் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு காப்பியம் சேக்கிழாரின் பெரிய புராணம் (திருத்தொண்டர் புராணம்). சேக்கிழார் ஒரு பாத்திரத்தை காப்பியத்தில் கையாளும்போது அவரது குழந்தைப் பருவம் இளமைப் பருவம் பக்தி நெறி வீடு பேறு என்று அழகாக தனித்தனிப் பாடலாக்குவார். ஆனால் சிலப்பதிகாரத்தில் கண்ணகியை முதல் முதலாகக் காட்டும் கவிதையாக எடுத்த எடுப்பிலேயே பதிகத்தில் ஒருமுலை இழந்தாள் ஓர் திருமா பத்தினி என்று முன்னிறுத்துகிறார். அடுத்து வரும் உரைபெறு கட்டுரையில் கண்ணகியை ஒரு பத்தினித் தெய்வம் என்றார். அடுத்து மங்கல வாழ்த்துப் பாடலில்,

> “மாகவான் நிகர்வண்கை மாநாய்க்கன் குலக்கொம்பர்
> ஈகைவான் கொடியன்னாள் ஈராறு அகவையாள் அவளுந்தான்
> போதில்ஆர் திருவினாள் புகழுடை வடிவென்றும்
> தீதிலா வடமீனின் திறம்இவள் திறம்என்றும்
> மாதரார் தொழுதுஏத்த வயங்கிய பெருங்குணத்துக்
> காதலாள் பெயர்மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ”

என்று அறிமுகப்படுத்துகிறார்.

ஆனால், பார்ப்பனரின் பண்பாட்டுக் கூறுகளான வேதம் வேள்வி சார்ந்த திருமண முறை, சோதிடம், விதிக் கொள்கை, நல்ல நேரம், இந்திரன், பூதம், என்ற சநாதன சாத்திர விதைகளைத் தூவுகின்ற பாடல் வரிகளுக்குப் பஞ்சமில்லை. மேலும், முற்பிறப்பு மறு பிறப்பு மற்றும் கருமக் கொள்கை போன்றவற்றிற்கு அடுக்கடுக்காக அநேக அடிகளில் பாட்டியற்றப்பட்டுள்ளன.

மேலும் இந்திர விழா ஊர் எடுத்த காதையில் பார்ப்பனரின் ரிக் வேதம் கொண்ட கடவுளரான இந்திரனை முதலில் உயர்த்திப் பிடித்துப் பாடல் இயற்றினர். அதன் மூலம் மன்னரை மக்களை கோயில் விழா எடுத்து மண்டியிடச் செய்தது.

அதன் பிறகு அப்போது தமிழ் மண்ணில் நிலவி வந்த சைவம் ஆசிவகம் சாங்கியம் புத்தம் சமணம் போன்றவற்றின் உயர்ந்த கருத்துகளையும் தத்து எடுத்தனர். அது போது வட நாட்டில் இருந்து இறக்குமதியாகிய திருமால் மற்றும் கோமரம் அல்லது சுப்ரமணிய வழிபாட்டினையும் கையில் எடுத்தனர். அதற்கு இவர்கள் பயன்படுத்திய முதல் தளமாக சிலப்பதிகாரம் இருப்பதை அறிய முடிகிறது.

வேறு வார்த்தையில் சொல்வது என்றால் பார்ப்பனர்கள் சிலப்பதிகாரம் என்ற போர்வையில் தமது வேத மதக் கருத்துகளைத் தொகுத்தெடுக்கும் ஒரு நூலாக இதனை வடித்தெடுத்தனர். இந்த ஒரு நூலே கி பி நான்காம் நூற்றாண்டின்

திருமூலர் திருமந்திரத்திற்கும் கிபி ஆறாம் நூற்றாண்டின் பக்திப் போருக்கும் அடிக்கல் நாட்டியது. இதற்கு முகமன் கூறிய வரியே விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி என்று இந்திரனுக்கு நன்னீர் அபிடேகம் நடத்தி முடித்தது.

அதன் பின் பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் என்றது. அதாவது கி பி இரண்டாம் நூற்றாண்டிலேயே சிவனுக்கு என்று ஒரு வழிபடும் கோயில் ஒன்று காவிரிப்பூம் பட்டடினத்தில் இருந்தது என்ற ஒரு பொய்யுரையை நல்கியது. பிறவா யாக்கை என்றால் சிவனது உடல் ஆண் பெண் சேர்க்கையால் உண்டானது அல்ல என்றது. ஆனால் அவனது உருவினை ஆண் பெண் பாலின உருப்பின் சேர்க்கையாகிய லிங்கம் என்பதை கி பி ஆறாம் நூற்றாண்டின் பக்திப் போரின் மூலமாக ஏற்படுத்தினர்.

அதற்கு முன்பாக லிங்க வழிபாடு என்பது காதலன் காதலியின் அடையாளச் சின்னமாக இருந்தது. அதாவது தினைப்புனத்து நங்கையும் நம்பியும் சந்தித்து உடல் தொட்டு பழகும் நிகழ்விற்குத் தோழியானவள் இந்த லிங்க உருவினை மண்ணில் புதைத்து பின் அவர்களைத் தேடி எடுக்கச் செய்வர். அப்போது வேகமாக ஓடிச்சென்று நீயா நானா என்று போட்டிப் போட்டுக் கொண்டு தரையைத் தோண்டி அந்த அன்புக் குறியை எடுப்பர். இத்தகையை நிகழ்விற்கு முகமன் கூறும் முதல் சந்திப்பினை இயற்கைப் புணர்ச்சி என்பர். இப்போது இந்த லிங்கக் குறி உருவம் மங்கையின் மனம் நிறைந்த அடையாளச் சின்னமாக அவளோடு வாழ்வின் இறுதி நாள் வரையில் வழிபடு பொருளாகப் பயணிக்கிறது. இதனால் தான் இந்தியாவின் தமிழினம் வாழ்ந்த எந்த ஒரு இடத்தையும் அகழ்வு ஆராய்ச்சி செய்தால் அங்கு கிடைக்கின்ற ஒரு பொருள் இந்த லிங்கமாக இருக்கிறது. எனவே கி மு காலத்து தமிழினத்தின் வீடு தோறும் இருந்த ஒரு காதல் சின்னம் இந்த லிங்கம்.

அத்தகைய லிங்க உரு கி பி ஆறாம் நூற்றாண்டில் சிவன் என்ற பெயரைத் தாங்கியது. சமணர்களின் பள்ளி கைப்பற்றப்பட்டு கருவறையாக மாறிய பொழுது அதில் இந்த லிங்கம் நாட்டப்பட்டது. அதற்கு ஊர்கள் தோறும் இருந்து தொண்டாற்றிய பெரியோர்களின் பெயரோடு சேர்த்து பெயரிடப்பட்டது. அல்லது பண்படிப் பெயராக ஞான லிங்கம், சத்திய லிங்கம், சாதி லிங்கம் முத்துலிங்கம் என்ற பெயரினைக் கொண்டது. அதுவே பிற்காலத்தில் ராம லிங்கமாகவும் பெயரினைக் கொண்டது. எனவே கி பி இரண்டாம் நூற்றாண்டில் பிறவா யாக்கைப் பெரியோன் என்ற அளவிலேயே அவர்களால் ஒரு கருத்தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. அதற்கு மேலாக பார்ப்பனரால் எதுவும் செய்ய முடியவல்லை. எனவேதான் சிவனுக்கு ஒரு விழா எடுத்தாக சிலப்பதிகாரத்தில் அவர்களால் எழுத இயலவில்லை. இந்திரனுக்கு விழா எடுத்ததாகவே பாடல் புனைந்தனர்.

அது போல் வட நாட்டில் அப்போது சுப்ரமணியன் என்ற ஒரு தேவனை உருவாக்கிஅதற்கு என்று ஒரு தனி மதமாக இயங்கியது. அப்போது அதனையும் தன்வயப்படுத்துவதற்கு இங்கே அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில் என்ற சொல்லாடலையும் பெய்து வைத்தனர். அதாவது இங்கு அவர்களால் முருகன் என்றோ சுப்ரமணியன் என்றோ வெளிப்படையாகக் கூற முடியவில்லை என்பது தெளிவாகிறது.

ஆனாலும் தமிழ் மண்ணில் மலையும் மலைசார்ந்த பகுதிகளின் வேட்டுவர்களின் கையில் உள்ள வேட்டைக்கு உரிய கருவியாகிய வேலினை வணங்கு பொருளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது செவ்வேல் என்ற ஒரு சொல்லாடலைப் பெய்தனர். வேலினைக் கையில் எடுத்து வேட்டைக்குச் சென்ற வேடுவர்களைக் காப்பவனாக செவ்வேல் ஏந்திய ஒருவன் உள்ளான் என்றனர். அவனுக்கு ஆறு முகங்கள் என்றனர்.

தமிழ் மண்ணில் தொல்காப்பியம் காட்டுகின்ற சேயோன் என்பான் ஆறு

தலைகளைக் கொண்டவனாகக் காட்டப்படவில்லை. மாற்றரும் சிறப்பின் மரபியல் கிளப்பின் என்று கடவுளை தொல்காப்பியம் முன்னிறுத்தவில்லை. எந்த ஒரு பொருளையும் கடவுளாக அல்லது வணங்கு பொருளாக தொல்காப்பியம் தமிழினத்திற்கு அடையாளப் படுத்தவில்லை.

ஆனால் காவிரிப்பூம்பட்டினத்தில் கி பி இரண்டாம் நூற்றாண்டிலேயே செவ்வேலுக்கு என்று தனியே ஒரு கோயில் இருந்ததாக காட்டினர். உண்மையைச் சொல்வது என்றால் கி பி ஆறாம் நூற்றாண்டில்தால் திருவெண்காட்டு கோயிலும் பூம்புகாரின் சாயாவனம் கோயிலும் அப்பரும் திருஞானசம்பந்தரும் இயற்றிய பாடல்களின் மூலமாக உருவாக்கம் செய்யப்பட்டவையாகும். அவற்றை முதல் இரண்டாம் குலோத்துங்கச் சோழர்களே பெருங் கோயிலாக எடுப்பித்தனர் என்பதை கோயில் கல்வெட்டுகள் காட்டுகின்றன. மேலும் கோயிலினுள் உள்ள பெரும் மண்டபங்களை 1950ஆம் ஆண்டுகளுக்குப் பிறகே நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் எடுப்பித்தார்கள் என்பதை அந்தந்த மண்டபத்தில் உள்ள கல்வெட்டு சாசனம் சாட்சி கூறும். நிலைமை இப்படி இருக்க கி பி இரண்டாம் நூற்றாண்டிலேயே சிவனுக்கும் முருகனுக்கும் அங்கு கோயில் இருந்தது என்று எழுதியது பார்ப்பனரின் வஞ்ச மனத்தைக் காட்டுகிறது.

மேலும் வட நாட்டில் அன்று வணங்கப்பட்ட பலராமன் என்பவனுக்கும் கோயில் இருந்தது என்றனர். இதனை வால்வளை மேனி வாலியோன் கோயிலும் என்றனர். அத்தோடு திருமாலுக்கும் ஒரு கோயில் இருந்ததை நீல மேனி நெடியோன் கோயிலும் என்றார் அடிகள். இங்கே கூர்ந்து பார்த்தால் பாடல் வரிகள் சிவன் என்றோ முருகன் என்றோ பலராமன் என்றோ திருமால் என்றோ வெளிப்படையாகக் காட்டப்படவில்லை. ஆனால் உரையாசிரியர்கள் தங்கள் மனம் போல் சிவன் என்றும் முருகன் (ஆறுமுகம்) என்றும் விட்டுணு என்றும் அவர்கள் உரை எழுதினர்.

திருமுருகாற்றுப்படை எழுதப்பட்ட காலத்தில் கூட இப்படி ஒரு கோயில்கள் காவிரிப்பூம்பட்டனத்தில் இருந்ததாக வேறு எங்கும் குறிப்பு இல்லை. மேலும் சாயாவனத்தைப் பாடிய திருஞான சம்பந்தர் தமது திருச்சாய்க்காட்டுப் பதிகத்தில் சித்தமொன்ற வல்லார்க்கு அருளும் சிவன் கோயில் என்கிறார். வெண்டலைக் கருங்காடுறை வேதியன் கோயில் என்கிறார். அதாவது பார்ப்பனருக்கு உரிய வேதத்தைக் கொண்ட கடவுளாக வேதியன் கோயில் என்கிறார். அதாவது தமிழனின் மண்ணில் பார்ப்பனரின் கடவுளை நிறுவி விட்டுப் பிறகு அந்த மண்ணையே களவாடுகின்ற ஒரு ஏற்பாட்டினை மேற்படி திருஞானசம்பந்தன் செய்கிறார். ஆனால் அவர் எந்த ஒரு இடத்திலும் அங்கு பலராமனுக்கும் திருமாலுக்கும் முருகனுக்கும் கோயில் இருந்ததாகப் பாடல் புனையவில்லை. இன்னும் சற்றே விளக்கமாக தமது தேவாரத்தில்,

> போய்க்காடே மறைந்துறைதல் புரிந்தானும் பூம்புகார்ச்
> சாய்க்காடே பதியாக உடையானும் விடையானும்

என்றே பாடல் புனைந்தார்.

இன்றையபூம்புகார்சாயாவனம்என்பதுசாய்க்காடுஎன்றுஅழைக்கப்பட்டதை திருஞானசம்பந்தரின் தேவாரத்தின் மூலமாக அறிகிறோம். சாய்க்காடு என்றால் மூங்கில் காடு எனலாம். யாம் அங்குள்ள பள்ளியில் படித்த காலத்திலும் இந்த ஊரில் மூங்கில் காடுகளே மண்டியிருந்தது. இதனை மையப்படுத்தியே சாகித்திய அகாடமியின் விருது பெற்ற சாயாவனம் என்ற கதை எழுந்தது.

எனவே பார்ப்பனீயம் கி மு காலத்திலேயே பிற மதத்தின் வழிபாட்டுக்

கோயில்களை இடித்து விட்டு தமதாக்கிக் கொள்கிற வேலையைத் தொடங்கிவிட்டதை சிலப்பதிகாரமும் திருஞான சம்பந்தரின் பக்திப் போரும் காட்டுகின்றன. வரலாறு அறியாத தமிழினத்தை இன்றும் இப்படிப்பட்ட வழிபாட்டு தளங்களை இடிப்பதற்கு கர சேவர்கள் என்ற பெயரைத் தாங்கி நின்றதை பாபர் மசூதி இடிப்பில் கண்டுள்ளோம். இப்போது பாடல் முழுவதையும் காண்போம்.

> பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
> வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
> நீல மேனி நெடியோன் கோயிலும்
> மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

என்று கடைசியாகப் பூம்புகார் நகரத்தை ஆட்சி செய்த சோழ மன்னருக்கும் ஒரு கோயில் இருந்தது என்று முடிக்கிறார். ஆனால் வரலாற்றில் அப்படிப்பட்ட ஒரு மன்னர் யார் என்றோ அவரது காலம் குறித்தோ எந்தத் தகவலும் இல்லை.

திருவள்ளுவர் அரண்மனையை அரண்மனை என்றே குறிப்பிட்டார். அப்போது தமிழ் மண் தமிழர்களின் கையில் இருந்தது. கால மாற்றம் பார்ப்பனரின் ஆதிக்கம் தமிழ் மண்ணைக் கவர்ந்தது. அப்போது அதனைப் பார்ப்பனீயம் கோயில் என்றது. மக்கள் எங்கு சென்று கும்பிட்டு குனிந்து நிற்கின்றனரோ அந்த இடத்தை கோயில் என்றது. அதன்படி அரண்மனையை அரண்மனை என்று கூறாமல் கோயில் என்றனர். மன்னவன் கோயில் என்றனர். இப்படிப்பட்டச் சொல்லாடல் சேக்கிழார் காலத்தும் கம்பரின் காலத்தும் இருந்துள்ளது. மேலும் பதினேழாம் நூற்றாண்டில் திருவிளையாடல் புராணத்தை எழுதிய பரஞ்சோதி முனிவரின் காலம் வரை கோயில் என்ற சொல்லை அரண்மனையைக் குறிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தினர் என்பதோடு அமைவோம். திருஞானசம்பந்தரின் காலத்தில் வழிபடு கோயிலை தளம் என்றனர். தள புராணம் என்றனர். தமிழ் மண்ணில் இமய மலையில் இருந்து வந்த சிவனும் பார்வதியும் பந்து விளையாடிய மண் என்றனர். இறைவனின் மண் என்றனர். பார்ப்பனரின் பூமி என்று சொல்லாமல் சொல்லிப் போயினர்.

இன்று இந்த மண்ணில் பார்ப்பனீயத்தின் மனம் புண்ணாகும்படி எந்த ஒரு உண்மையையும் வெளிப்படையாக எழுதுவது தண்டனைக்கு உரிய குற்றமாகப் பார்க்கப்படுகிறது. சீயர் சீற்றம் கொள்ளாமல் இருக்க வேண்டித் தமிழினம் கை கட்டி வாய்ப்பொத்தி நிற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. சாதி காத்த சங்கராச்சாரியாரை மகா பெரியவாள் என்று மரியாதையாக விளிக்க வேண்டியுள்ளது.

தமிழ் மொழியை நீச பாஷை என்று கூறிய கொடு மனத்தோரின் மனம் புண்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது தமிழினத்தின் கடனாகிறது. உலகத்தில் இது போன்ற ஒரு நிலைமை வேறு எந்த நாட்டிலும் இல்லை. ஆண்டாண்டு காலமாக மண்ணின் மைந்தர்களின் அறிவையும் அறிதலையும் பறித்த ஒரு இனத்தைக் கையெடுத்து கும்பிடும் கூட்டத்தை வேறு எந்த நாட்டிலும் காண இயலாது. கல்வி பறித்த கயவர்களை கடவுளாகப் பார்க்கும் அபலைகளை வேறு எந்த நாடும் கொண்டிருக்கவில்லை.

> செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
> உட்பகை உற்ற குடி (குறள் 887).

■

# அனுபவம்



நிரந்தரமில்லை என்று தெரிந்திருந்தும்
அதனையே நினைத்துக்கொண்டு
நெருங்கிச் செல்கின்றோம்...

ஒரு கால கட்டத்தில் அது நம்மை
விட்டுச்செல்லும்போது
கண்ணீர் சொட்டுகின்றோம்....

நம்பிக்கை என்ற சொல்லோடு கூட
சம்பந்தம் இல்லாதவர்கள் மீது
நம்பிக்கை வைக்கின்றோம்...

பின்பு துரோகி என்று
பட்டமும் சூட்டுகிறோம்....

எவரைப் பற்றி நாம்
அதிகம் சிந்திக்கின்றோமோ...
அவரால்தான் நம்
பாதி வாழ்க்கை பாழடைகிறது...

இந்த உண்மையை அறிந்திருந்தும்
நாம் அதை ஏற்பதே இல்லை..

வார்த்தையில் அழகாய்த் தெரிந்தவர்
எல்லாம் வாழ்க்கையில் அழகாய்த்
தெரிவதில்லை... ஆனாலும்
அவரோடுதான் வாழ நினைக்கிறோம்...

இப்படி எத்தனை காலம்தான்
ஏமாறப் போகின்றோமோ...

சிந்தனை செய்யும் சக்தி இருந்தும் அதைச்
செலவழிப்பதில் கஞ்சத்தனம்..
கொஞ்சம் அதிகம்தான்...

காதலுக்குச் சொந்தமான தனிமை...
குழந்தைகளுக்குச் சொந்தமான குறும்பு...
ஏழைகளுக்குச் சொந்தமான பசி..
மனிதருக்கு மட்டுமே
சொந்தமான மனமாற்றம்...

இந்த மனம் என்ற ஒன்று மாறாமல்
இருந்திருந்தால் மனித இனம்
எப்போதோ மாண்டு போயிருக்கும்...

என்ன செய்வது இப்போதெல்லாம்
ஒரு மனிதரோடு பழகிப்பார்த்தாலே
ஆயிரம் மிருகங்களோடு பழகிய
அனுபவம் வருகிறது.

**- ஷேக் நிஸ்றா**

# லென்ஸின் மகிமை
# (குருவின் மகிமை)



**ராம்க்ருஷ்**

ஸ்டேடியம் முழுவதும் மனிதத் தலைகளால் நிரம்பி ஆரவாரக் கொண்டாட்டத்துடன் ஆசியக் கோப்பை புட்பால் மேட்ச் நடந்து கொண்டிருந்தது. மைதானத்தில்விளையாடிக்கொண்டிருக்கும் இரண்டு அணிகளும் சரிசமமான போட்டி யாளர்கள் என்றாலும் அதில் ஆசியக் கோப்பையில் பெரும்பாலும் வெற்றி வாகை சூடிவரும் அணியின் கை ஓங்கிய நிலையிலேயே இருந்தது. பந்து எதிரணியின் கோல் போஸ்ட்டுக்கு அருகிலேயே இருந்து கொண்டிருந்தது. இதில் வெற்றி பெறும் அணியுடன் நாளை விளையாட இருக்கும் எதிரணிக் குழுவினரும் ஆட்டத்தின் போக்கைக் கணித்திட மைதானத்தில் பார்வையாளர்களாக அமர்ந்திருந்தனர்.

“சலீம், நாளைய ஆட்டத்தில் நாம் இந்த வலுவான அணியோடுதான் மோத வேண்டியிருக்கும் என நினைக்கிறேன்” என்றான் நாளை அணியின் கேப்டனான விளையாட்டு வீரன் வினீத்.

“ஆமாம், இதோ அந்த அணி ஒரு கோல் போடுகிறது பார். என்ன ஒரு வேகம், கட்டுப்பாடு இந்த அணியை நாம் வெற்றி கொள்ள முடியுமா என்ன? கஷ்டம் தான் வினீத்” என்றான் முக வாட்டத்துடன் சலீம்.

“சலீம் நமது கோச்சின் திறமைக்கும் அனுபவத்திற்கும் முன்னால் இந்த அணி மட்டுமல்ல எந்த அணியும் நிற்க முடியாது தெரியுமா” என்றான் சற்றே பெருமையுடன் விநீத்

“ஆமாம் என்ன சொல்லித் தருகிறார். நீங்களேஉங்கள்போக்கில்விளையாடுங்கள் என்கிறார். சில சமயங்களில் மட்டும் சில நுணுக்கங்களைச் சொல்லித் தருகிறார் என்பது ஒரு திறமையாகுமா? எனக்கு சந்தேகமாகத் தானிருக்கிறது.”

‘‘டேய் சந்தேகப் படுகிறாயா? உனக்கு வெற்றியின்மீது நம்பிக்கை யில்லையாஅல்லதுஉனதுதிறமையின்மீது நம்பிக் கையில்லையா?”

“எனக்கு நமது கோச்சின் மீதுதான் நம்பிக் கையில்லை.

“சலீம் கோச் நமக்கு ஒரு ஆசானைப் போல்,தவறுகள்ஏற்படும்போதுதிருத்தவும்,

புதிய முறைகளைப் பயிற்றவும்தான் அவர் இருக்கிறார். அவருடைய அனுபவத்திற்கு முன் நமது திறமைகள் மிகவும் குறைவுதான். அப்படியிருக்கும்போது ஏன் உனக்கு சந்தேகம்?''

"அதோபார்அந்தஅணிமடமடவேன்று 4 கோல்கள் போட்டு விட்டார்கள். அவர்களை ஜெயிக்கவே முடியாது போலிருக்கிறதே."

''சரி சரி இப்போது விவாதம் வேண்டாம். ஆட்டத்தைப் பார். அதில் அவர்களுடைய தவறுகளைப் பார். இதுவும் கோச் சொல்லிக் கொடுத்ததுதான். அது நமக்கு மிகவும் பயன்படும். சரிதானா''

வினீத் இப்படியெல்லாம் நம்பிக்கை யூட்டியபோதும் சலீமின் முகத்தில் தெரிந்த அவநம்பிக்கையைக் களைய முடியவில்லை. முகவாட்டத்துடன் தான் காணப்பட்டான்.

அந்த அணி எதிரணிக் கெதிராக 7 கோல்கள் போட்டு 7க்கு 0 என்கிற கோல் கணக்கில் ஜெயித்துவிட்டதாகவும் நாளை வினீத் இடம்பெற்ற அணியோடு விளையாட இருக்கிறதெனவும் அறிவிப்பாளர் அறிவித்துக் கொண்டிருந்தார் மிகுந்த ஆரவாரத்துக்கிடையே.. வெற்றி பெற்ற அணியின் ஆரவாரிப்பு அடங்க வெகு நேரம் பிடித்தது.

மாலையின் நடந்த பயிற்சி ஆட்டத் தின் போதுகோச் அவரவர் விளையாடுவதை உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்களை அவர்கள் போக்கில்விட்டு சிறுசிறு திருத்தங்கள் மட்டும் சொல்லிக் கொண்டிருந்தார்.

அடுத்த அணியின் கோச் இவரின் திறமை அறிந்து தன் அணியினருக்கான அறிவுரைகள் மற்றும் கடுமையான பயிற்சிகளும் அளித்துக் கொண்டிருந்தார். அங்கே பார் வினீத் எதிரணி கோச்சின் பயிற்சியை. நமது கோச் நம்மையே விளையாடச் சொல்லிவிட்டு ஹாய்யாக உட்கார்ந்துவிட்டார்.

''சரி சரி புலம்பாதே, நீ உனது தனிப்பட்ட திறமையைக் குறைத்திடாமல்

# வேண்டுதல்

கடவுளே எல்லோரையும் காப்பாத்து
திருவிழாவுக்கு புது ஆடை வேண்டும்
நான் உன் நண்பனாக வேண்டும்

நாளைக்கு பள்ளிக்கு
விடுமுறை விட வேண்டும்
வீட்டுப்பாடத்தை ஆசிரியர்
கேட்க மறந்திட வேண்டும்

கல்லூரி காதலியிடம்
எப்படியாவது என் காதலை
சொல்லிவிட வேண்டும்
காலமெல்லாம் அவளோடு
வாழ்ந்திட வேண்டும்

எழுதுகிற தேர்வில் எல்லாம்
எப்படியாவது தேர்வாகிவிட வேண்டும்
அத்தனை தேர்வுகளிலும்
முதல் மதிப்பெண் வாங்கிட வேண்டும்

நல்லதொரு வேலை
கிடைக்க வேண்டும்
வாங்கிய கடனை முழுவதுமாக
அடைத்து முடித்திட வேண்டும்

அழகான வீடு கட்டிட வேண்டும்
அதில் ஆனந்தமாய் நாங்கள்
வாழ்ந்திட வேண்டும்

அடுத்த பத்து ஆண்டுகளும்
எங்கள் ஆட்சியே நிலைத்திட வேண்டும்

என ஐந்து வயது முதல்
எழுபது வயது வரையானவர்களின்
ஆசைகளைக் கேட்டு,
கேட்டுக் களைத்துப்போன
நந்திக்கு பாலாபிஷேகம்.

அந்த ஐயரும் வைக்கிறார்
ஒரு வேண்டுதலை.

**பாண்டிய ராஜ்**

நாளை விளையாடு. வெற்றி நமதே சரிதானா?'' என சாந்தப்படுத்திவிட்டு தங்கியிருக்கும் அறைக்குச் சென்றான் வினீத்.

அடுத்த நாள்

மைதானம் வண்ண வண்ண உடைகளணிந்த இளம் பெண்களுடனும் இளைஞர்களுடனும் கலகலப்பான சூழலில் மகிழ்ச்சிப் பெருக்கில் நிரம்பி வழிந்தது

அணிகள் இரண்டும் ஆட்டத்தைத் துவக்கின. எதிரணி தொடங்கிய 10 நிமிடத்திலேயே ஒரு கோல் அடித்தது. வேகம் வேகம். வினீத் சலீமிடம் நீ உன் ஆட்டத்தை ஆடு என உற்சாகப் படுத்தி வந்தான். இதற்கிடையே ஆட்டத்தின் முதல்பாதி முடிந்தது.

இடைநேரத்தில் கோச் வினீத்தை அழைத்து ஏதோ முணுமுணுப்பாய் சொல்லிக் கொண்டிருந்ததை சலீம் பார்த்தான். மறுபடியும் இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியது. இதிலும் எதிரணியின் கையே ஓங்கத் தொடங்கிய நிலையில் வினீத் சலீமிடம் வேகமாக அருகில் ஓடிக் கொண்டே சென்று "நான் பந்தை உனக்கு பாஸ் செய்கிறேன் நீ அதைக் கோலாக மாற்றிவிடு" என்று அவசர அவசரமாகச் சொல்லிச் சென்றான்.

அவநம்பிக்கையுடன் ஓடிக் கொண்டிருந்த சலீமின் காலுக்கு மந்திரமிட்டாற் போல் வினீத்திடமிருந்து தள்ளப்பட்ட பந்து வர அவன் விரைந்து அதனை கோலுக்குள் திறமையாகத் தள்ள அது கோலாக பரிணமித்தது. மறுபடியும் ஆட்டம் முடிய 5 நிமிடங்களுக்கு முன் அதே போல் பந்து வினீத்தின் கால்களிருந்து பறந்து வந்து சலீமின் கால்களில் தஞ்சமடைந்து அந்தக் கால்களால் கோல் போஸ்ட்களின் நடுவில் தள்ளப்பட்டு நெட்டில் தஞ்சமடைந்தது.

கோல்போட்டசலீமால்தன்னையே நம்ப முடியவில்லை. எகிறிக் குதித்து கண்களில் நீர் நிரம்பத் தத்தளித்தான்.

இரண்டாவது பாதி ஆட்டமும் முடிய ஒட்டுமொத்த ஆட்டம் முடிந்து வினீத் அணி 2க்கு 1 என்ற கோல் கணக்கில் எதிரணியை வெற்றி கொண்டது.

சலீம் வேகமாக ஓடிச் சென்று வினீத்தைத்தழுவிக்கொண்டுஆரவாரித்தான்.

சிறிது நேரத்திற்குப் பின் தன்னை நிலை நிறுத்திய சலீம் விநீத்திடம் இந்த மாற்றம் எப்படி நிகழ்ந்தது என்று கேட்டான். எல்லாம் இறைவன் அருள்தானோ என்றான்.

சலீம், கோச்சைப்பற்றிசொன்னாயே அவருடைய உக்தியினால்தான் என்னால் மின்னல் வேகத்தில் பந்தை உன்னிடம் பாஸ் செய்ய முடிந்தது. இடைநேரத்தில் அந்த நுட்பத்தைத்தான் என்னிடம் அவர் சொன்னார். பந்தை உன்னிடம் தள்ளிவிட்டால் சலீம் அதைக் கோலாய் மாற்றிவிடுவான் என்று நம்பிக் கையாய்ச் சொன்னார். இறைவன் அருள் என்றாய் சரிதான். ஆனாலும் அந்த அருளைப் பெறுவதற்கும் ஒரு பிரதிபலிப்புத் தேவைப் படுகிறதல்லவா, இதைத் தான் திருமூலர்

> சூரிய காந்தமும் சூழ்பஞ்சு போலவே
> சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
> சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
> சூரியன் தோற்றமுன் அற்ற மலங்களே

என்றார்.

இறைவன் அருளால்தான் ஆன் மாக்கள்மாயையிலிருந்துவிடுபடவேண்டும். எனினும் இறைவன் அருள் நேரே பாயாது. இறையருள் சூரிய ஒளி போன்றது. மாயையை, அறியாமையை சுட்டெரிக்க வேண்டுமென்றால் அது குருவருள் என்ற லென்ஸ்மூலமாகப் பாய வேண்டும்.

சரி சரி வினீத் நாம் இப்போது நமது லென்ஸைப் பார்த்து ஆசிபெறுவோம் வா என அழைக்க இருவரும் சிரித்த சிரிப்பில் அணியினரும் பங்கு கொள்ள அங்கே மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது. ■

# நண்பனே ...
# நீயின்றி நானேது?

திங்களற்ற வானும் கூடும்
திங்களில் ஓர் நாள்!
திண்தோள் நட்பற்றோர்
நானிலத்தில் யாருளர்!

தந்தையின் ஆதரவு
தாயின் ஆதுரம்
உடன் பிறவா
சகோதரத்துவம்
உள்ளத்து உணர்வாய்
உடனுறையும் உன்னதம்!

தோல்வியைத் தொட்டிடாமல்
தோள் கொடுத்துத் தூக்கிவிடும்
தோழனவன்! தீமை நமை அண்டாமல்
தீமைக்குத் தீங்காவான்!!!

வறுமையிலும் செழுமையிலும்
வேற்றுமையறியான்!
தாம் புசிக்காமலேயினும்
நம் பசி பொறுக்கமாட்டான்!!

உறவுகள் மேம்பட தூது செல்வான்!
பகைகளைப் பட்டென நறுக்கி
பரிதவிப்பைப் பகர்வான்!
ஆபத்பாந்தவன்! ஆதரவாளன்!
அறிவமைச்சனவன்!

நம் வீட்டின் தூணிலும்
துரும்பிலும் தோற்றம் கொள்ளும்
நரசிம்மமவன்! குருவுக்குக்
குருவாய் கொண்டாடும்
குலதெய்வம்! கூடி நின்று
கோடி நன்மை செய்வான்!

பெரும் பதவி - பேரறிவு-
அந்தஸ்து- ஆளுமை
அதததனையும் விட்டு
அடுக்களைப் பூனையாய்
நம்மையே அண்டிச் சுற்றிடுவான்!
எல்லா நண்பனும் எல்லா
பார்த்தனுக்கும் சாரதிதான்!
நணபனின்றி நானில்லை!

**மங்கையர்க்கரசி**
தலைமைச் செயலகம்

# காதல் தேன்குடம் கவிழ்ந்த போது......!

**வெற்றிப்பேரொளி**



•

அது என்ன
கனவா
நீ
கடித்து எறிந்த
கனியின் மிச்சமா?

•

தித்திப்புக்கென்றொரு
திசையுண்டா?
உண்டே...
நீயிருக்கும்
திசையெனக்குத்
தித்திப்புத் திசை!

•

மூன்றாம் பாலில்
மூழ்கியெழுந்துப் புகுகிறோம்
இப்போது நாம்
வள்ளுவன் எழுதாத
நான்காம் பாலில்......!

•

தந்ததைத்தானே கேட்கின்றேன்
அப்புறமென்ன....
திருப்பிக்கொடு முத்தத்தை!

•

கட்டிக்கொண்டு
தோளில் தொங்குகிறாய்
காதிலாடுகிறது
உன் ஜிமிக்கி...
அட
ஊஞ்சலுக்குள் ஊஞ்சல்!

•

பிரித்து வைத்திருக்கிறாய்
கையில் புத்தகத்தை
படிப்பதென்னவோ
என்னைத்தான் !



நடை பயணத்தில் இளைப்பாறிய
நியாபகங்கள் விடைபெற்றிருந்தன
வெட்டபட்ட மரங்கள்..!

- வடகரை செல்வன்

# அவள்...

காற்றில் கலந்து
வரும் ஈரமெல்லாம்
அவள் குளித்து முடித்த
கூந்தலின் வாசமென்பேன் ..!!!
--
கண்களெங்கும் நிறைந்தவளே
நெஞ்சமெங்கும் உறைந்தவளே
காதலை கொடுத்திட்டவளே ...
எல்லாமே பொய்யாகிட
நீ நான் மட்டும் இங்க
மெய்யாக வாழ்வதேனடி .. !!!
--
வானெங்கும் கார் இருள்
படர்ந்திருக்கின்றது.
நீயுமில்லை
நிலவும் இல்லை
நட்சத்திரங்கள் இல்லை ...
எங்கும் ஒரே தனிமை...!!
மனம் மட்டும் சஞ்சலத்தோடு ..!!!

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர் மாவட்டம்

# அன்பு

அசாதாரண வார்த்தையில்
ஆர்ப்பரிக்கிறாய் ஆழ்மனதில்

ஆழி அலைகளிலே
அலைகிறது என்மனமும்
அமைதியாய்

தேளாய் கொட்டினாலும்
தேனமுது தெவிட்டினாலும்
இன்னமுது படைத்தாலும்
இன்னல் பல தந்தாலும்

துடிக்கின்ற இதயத்ததை
நிறுத்திட இயலாது

தூவானம் துவண்டாலும்
பூ மணம் மடிந்தாலும்
புன்னகைப் புதைந்தாலும்

பூத்திடுமே என் மனதில்
உன் நினைவு மத்தாப்பு

கார்மேகம் சிவந்தாலும்
கடுஞ்சினம் கொண்டாலும்
கல்லாய் மனம் போனாலும்
காத்திருப்பேன் சிலையாக

கரம்பிடித்த நாள் முதலாய்
வெண்மேகம் நானாக
செம்பரிதி நீயாக

பொருத்தமில்லா
இணையென்று
தூற்றுவோர் பலரிருக்க

பாவம் என்ன தெரியும்
அவர்களுக்கு
காதலின் கவிரசமும்
காட்டாறு கனியமுதும்

அட்சயபாத்திரமாய்
அன்பிருக்க
அள்ள அள்ள பெருகுமே!
கடுகளவும் சிறுகாதே!

- சரவிபி ரோசிசந்திரா



# பொறுமை

## Dr. ஃபஜிலா ஆசாத்

(International Life Coach - Mentor - Facilitator)

இதற்கு மேல் ஒரு போதும் பொறுக்க முடியாது.. நான் எவ்வளவு தான் பொறுத்து போவது. என்னை யார் என்று நினைத்துக் கொண்டாய்.. என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அனேகமாய் அனைவருமே பொறுமை இழந்து சொல்லி இருப்பீர்கள்.

இந்த அவசர உலகத்தில் ரெடிமேடாக எல்லாமே உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்றே மனம் விரும்புகிறது. 3G, 4G அடுத்து 5G என வந்து இன்று எல்லாமே மின்னல் வேகத்தில் கிடைத்து விடுகிறது. முன்பெல்லாம் லைப்ரேரிக்குப் போய் புத்தகத்தை புரட்டி புரட்டிப் பார்த்து தெரிந்து கொண்ட விசயங்கள் எல்லாம் இன்று ஒரு டச் ஸ்க்ரீனில் விரல் அசைவில் மளமளவென்று வந்து விழுந்து விடுகின்றன.

செய்திகள் வரும் வேகத்திலேயே செயல்களும் நடைபெற வேண்டும் என்று நினைக்கும் போதுதான் வினையாகிறது

பொறுமை என்றாலே பிறர் தரும் வலியை, சங்கடங்களை, நியாயமற்ற செயல்களை பொறுத்துக் கொள்வதே என்றே பலரும் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், பொறுமைக்கு அர்த்தம் பிரித்தால் அவசர கதியில் இயங்காதீர்கள். நிதானமாக செயல்படுங்கள், வேகம் வேண்டாம் என்பதை எத்தனை பேரால் உணர முடிகிறது.

பொறுமை என்பது பிறருடனான செயல்களில் மட்டுமல்லாமல் உங்கள் அன்றாட செயல்களிலும் அமல் படுத்துவதில் தான் உற்சாகமும் உண்மையான மகிழ்ச்சியும் இருக்கிறது.

வாழ்க்கையின் வெற்றிக்கு பொறுமை வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் எல்லோராலும் அப்படி பொறுமையாக இருக்க முடிவதில்லை. அதற்கு முக்கியமான காரணம், 'தங்கள் பொறுமையை பிறர் பலவீனம் என்று நினைத்து விடுவார்களோ' என அவர்களுக்குள் எழும் எண்ணம்தான் என்கிறது மனஇயல். உண்மையில் பொறுமை என்பது ஒரு பலம். அதனை உறுதியாக நம்புபவர்கள் மட்டுமே அதை சரியாக பயன் படுத்துவார்கள். அப்படி பக்குவப் பட்டவர்களுக்கு எந்த ஒரு விசயத்திலும் பொறுத்துப் போவது அவர்களுடைய தாக்குப்பிடிக்கும் சக்தியைக் கூட்டும். எந்த சூழலிலும் விடாமுயற்சியோடு வெற்றி பெற உதவும்.

பொதுவாக, யாரும் பொறுமையற்றவர்கள் இல்லை. ஒரு குழந்தை பெறுவதற்கு பத்து மாதங்கள் காத்திருக்க வேண்டும் எனத் தெரியும்போது யாரும் அதற்காக புலம்பிக் கொண்டிருப்பதில்லை.

அதற்கான காலம் வரும் வரை நிச்சயமாக காத்திருக்கிறார்கள். அத்தனை காலமும் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று ஒன்றுக்கு பத்து முறை யோசித்து மிகுந்த கவனத்துடனே ஒவ்வொரு செயலையும் செய்கிறார்கள்.

உங்களுக்கு தெரியும் ஒன்றைப் பற்றி தெளிவான பார்வை இருக்கும்போது அதன் நன்மை தீமைகள் புரியும்போது, அதன் கால வரையறையை சரியாக திட்டமிடும் போது மனம் அதற்காகத் தன்னை தயார் செய்து கொள்ளும். எந்த சூழலிலும் பொறுமையற்று தவிக்காமல் பொறுமையோடு விடா முயற்சியோடு வெற்றியைத் தட்டி செல்ல முனையும்.

சீன மூங்கில் பயிரிடுதல் பற்றி அறிவீர்களா? ஒரு விவசாயி சீன மூங்கில் விதைகளை விதைத்து தண்ணீர் பாய்ச்சி வருகிறார். ஒரு வருடம் போகிறது, எந்த வளர்ச்சியும் இல்லை. இரண்டாவது வருடம் போகிறது, இப்போதும் பூமிக்கு மேல் எதுவும் மாற்றம் தெரியவில்லை. இப்படியே 3வது 4வது வருடங்களும் போகின்றன. அவரது நண்பர்கள் அவரை சந்தேகமாக பார்க்கத் துவங்குகின்றனர். அவரது பொறுமை, முயற்சி, அக்கறை அனைத்துமே கேள்விக்கும் கேலிக்கும் ஆளாகிறது. 5வது வருடம் தொடங்குகிறது. நிலத்தின் மேற்பரப்பில் சின்னஞ் சிறிதாக எட்டிப் பார்க்கும் மூங்கில் செடி ஆறே வாரத்தில் அசுர வளர்ச்சி கொண்டு வானளாவ எழுந்து நிற்கிறது. அதுவும் எப்பேர்ப்பட்ட வளர்ச்சி. ஒவ்வொரு மரமும் 80 அடி உயரம் வளர்ந்து கேள்வி கேட்டவர்களின் வாயை அடைக்கின்றன. ஆறு வாரத்தில் அசுர வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் 4 ஆண்டுகள் அந்த விதைகள் பூமிக்குள் தங்கள் வேர்களை நிலைப் படுத்தி இருக்க வேண்டுமென்பது அப்போது தான் மற்றவர்களுக்குப் புரிகிறது.

பல நேரங்களில் இப்படித்தான், எந்த ஒருபலனும்தராமல்உங்களுடையஉழைப்பு எல்லாம் வீணாகிக் கொண்டிருக்கிறதோ என்று தோன்றும். ஆனால் நிச்சயம் சீன மூங்கில் போல் மாற்றம் உள்ளுக்குள் நிகழ்ந்து கொண்டு தானிருக்கும். தொடர்ந்து பொறுமையோடும் விடாமுயற்சியோடும் செய்யும் போது அதன் பலன் மகிழ்ச்சி தரும்.

மூங்கில் விதை போட்ட அந்த விவசாயியால் எப்படி வருடக் கணக்கில் பொறுமையாக காத்திருக்க முடிந்தது என்றால் 5 வருடங்கள் காத்திருந்தாலும் பலன் அதை விட அதிகம் கிடைக்கும் என்ற தகவல் அவருக்கு தெரிந்திருந்தது.

அதுபோல்தான், நீங்கள் விரும்பும் மாற்றங்கள் தரும் பலன்கள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தால், Active patience என்று சொல்லப்படும் அதற்கான ground work ஐ ஆரம்பித்து விட்டு, தேவையான கால கட்டம் வரை பொறுமையாக இருக்கும் போது அந்த பொறுமை அதன் வெற்றிக்கான மூலதனமாக அமைகிறது.

**வாழ்க்கையின் வெற்றிக்கு பொறுமை வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் எல்லோராலும் அப்படி பொறுமையாக இருக்க முடிவதில்லை.**

தவிர, தனக்கு என்ன வேண்டும் என தன்னுடைய இலக்கு அறிந்த ஒருவரால் பொறுமையோடும் விடாமுயற்சியோடும் எதையும் சாதிக்க முடியும்.

சன்டீகோ வை சேர்ந்த அந்த இளம் பெண் 'ஃப்லோரென்ஸ்சாத்விக்'கிற்குநீச்சல் என்றாலே அத்தனை மகிழ்ச்சி. கைகளும் கால்களும் அனாயசமாக தண்ணீரை விலக்கி செல்ல எந்த தூரத்தையும் சில மணிகளில் கடந்து வெற்றிக் கோட்டை எட்டி விடும் அசாதாரணமான திறமை வாய்ந்த பெண் அவர்.

ஆறு வயதில் நீந்தத் தொடங்கி பல சாதனைகளை அதில் புரிந்த அவள் அன்றும் தன் 34வது வயதில் சாதாரணமாகத் தான் அந்த நீச்சல் சவாலை எதிர் கொண்டாள். கலிஃபோர்னியாவின் நீர்ப்பரப்பில் 21 மைல் நீந்திக் கடக்கப் போகும் முதல் பெண்மணியாகநீந்தத்தொடங்கினாள்.ஏதோ மின்சார படகு நீரைக் கடந்து போவது போல் அவள் சரசரவென் நீந்தி பல மைல்களைக்

கடந்து கொண்டிருக்க இதோ வெற்றிக் கோட்டை நெருங்கி விட்டோம் என அவள் மனம் சொல்ல உடல் இளைப்பாறத் துடிக்க, கடுமையான பனிமூட்டத்தால் அவளால் அவள் சேர வேண்டிய கரைப் பரப்பை பார்க்க முடியவில்லை. இன்னும் தான் எவ்வளவு தூரம் கடக்க வேண்டி இருக்கும் எனத் தெரியாததால் அவள் மனமும் உடலும் சோர்ந்து பொறுமை இழந்து விட அவள் தனக்கு சப்போர்ட்டாக தன்னைத் தொடந்து வரும் படகிடம் தன்னால் இனியும் நீந்திக் கடக்க முடியாது என வெற்றிக் கோட்டை எட்ட முடியாதவளாய் சரணடைகிறாள். படகில் ஏறினால் அடுத்த நொடியில் கரை வந்து நிற்கிறது. அப்போது தான் அவளுக்கு புரிகிறது, அவள் கடக்க வேண்டி இருந்த தூரம் சில மீட்டர்கள் தான் மிச்சம் இருந்துள்ளது என்பது. உண்மையில் தான் எங்கிருக்கிருக்கிறோம் தான் இன்னும் எத்தனை தூரம் போராட வேண்டி இருக்கும் எனும் வரையறை தெரியாததாலே ஒவ்வொரு வரையும் பொறுமையை இழந்து மனம் தன் முயற்சிகளைக் கை விட செய்கிறது.

அதே பெண் இரண்டே மாதத்தில், மீண்டும் அதே சவாலை எதிர்கொள்கிறார். இந்த முறையும் அந்த பெண்ணிற்கு கிளைமெட் சதி செய்வது போல் அடர்ந்த பனி மூட்டத்தோடே இருக்கிறது. எங்கே கரை இருக்கிறது என்று இப்போதும் கண்ணால் பார்க்க முடியவில்லை. ஒரு முறை பெற்ற தோல்வி தந்த பாடமும் நிச்சயம் கரை மிக அருகில் தானிருக்க வேண்டுமென்ற நேர்மறை சிந்தனையும் அவளை இந்த முறை வெற்றிக் கரையைத் தொட்டு அந்த நீர்ப்பரப்பை மிக குறைந்த மணித் துளிகளில் நீந்திக் கடந்த முதல் பெண்மணியாக வரலாற்று சாதனை புரிய வைக்கிறது.

சூழல்கள் எவ்வளவு மேகமூட்டமாக தெளிவில்லாமல் இருந்தாலும் உங்கள் இலக்கில் நீங்கள் தெளிவாக இருந்தால், இதோ வெற்றிக் கோட்டை அடைந்து விடுவேன் எனும் நேர்மறை எண்ணத்தோடு இருந்தால் பொறுமையும் விடாமுயற்சியுடன் வெற்றியை நிச்சயம் உங்களால் அடைய முடியும். ■



## எழுதாத விதி

இது விடைபெறும் காலம்
என்று பல வழிகளில்
மறைமுகமாக உணர்த்தினாய்
நான் அதை உணரும் மனநிலையில்
எப்போதும் இருந்ததில்லை
நான் அழைக்காத பொழுதெல்லாம்
வலுக்கட்டாயமாக
பன்னீராய் சொரிந்தாய்
அன்பின் சொற்களை
புதுப்பித்துக் கொண்டே இருந்தாய்
இன்று நான் தோள் சாயும்போது
நழுவிச் செல்கிறாய்
குடை கேட்கும் போது
வெயிலில் காக்க வைக்கிறாய்
கையறு நிலையில் விட்டுச் செல்வதுதான்
நீங்கள் எழுதாத விதியோ!

**காந்திமதி செல்வரத்தினம்**

---



வாழ்வு என்பது
அனைவருக்கும் ஒன்று தான்..!
நாம் எப்படி வாழ்கிறோம் என்பதில் தான்
அடங்கி உள்ளது..
நம் வாழ்க்கை..!

**- பாரதி**



## ரோஜாமலரே ராஜகுமாரி

அவள் :

கன்னியென் மனதில் வாழும்,
காதலன் வருகைக் காக,
பின்னிய சடையில் வைக்க,
பறித்தநல் அழகு ரோஜா!!
என்னவன் மகிழ்ந்து எந்தன்,
எழில்குழல் மயங்கிச் சூட்ட,,
"கன்னமும் ஏக்கம் கொள்ளும்,
கரங்களில் ஏந்து கண்ணா"

அவன்:

மின்னிடும் கண்க ளாலே,
மெல்லென அணைத்து காதில்,
"பொன்நிற அழகே நீயேன்
புதுமலர் தாங்கி நின்றாய்?
உன்னவன் குழப்பம் கொண்டேன்!
உன்னிரு கனியோ கன்னம்,
உன்விரல் பற்றும் பூக்கள்,
என்மனம் எதனை நாடும்?
ஏந்திழை உன்னை யன்றோ?"

அவள் :

அன்பினால் இணைந்த உள்ளம்!
அருஞ்சுவை வாழ்வை எண்ணும்!
சொன்னசொல் மாறி டாமல்,
சுற்றமும் சூழ்ந்து நிற்க,
மின்னிடை துவள நீயும்
மிகைமலர் மாலை தந்தால்,
இன்பமென் மலரால் என்றும்,
இதந்தரும் நிலவை வெல்வேன்!!

**சு.வி.லட்சுமி**

## கொஞ்சமாய் காதல் செய்யேன் வசீகரனே...

கார்குழலில் விரலிடுக்கி
கருவிழியில் மையம் கொண்டு
'கொஞ்சமாய் காதல் செய்யேன்'

கன்னங்கள் கனியென உண்டு
காதினிக்க கசிந்துருகி
'கொஞ்சமாய் காதல் செய்யேன்'

மூக்கருகே உன் சுவாசம்
முன்னெற்றி முத்தம் இட்டு
'கொஞ்சமாய் காதல் செய்யேன்'

இதழூறும் கள்ளருந்தி
இலுப்பைப்பூ இதழெனச் சொல்லி
'கொஞ்சமாய் காதல் செய்யேன்'

**- கவிஞர் தேவி**



ஓவியம் : அருண் குமார்

முத்தங்களை
அள்ளிதெளிக்கின்றது வானம்
ஏந்திகொள்ள
இரு கன்னம் போதவில்லை....!!!!!

**ச. இராஜ்குமார்**

## பிரான்சு கம்பன் கழகம் நடாத்திய

# 19ஆம் ஆண்டுக் கம்பன் விழா

**27.09.2020**




ஆண்டுதோறும் பிரான்சு கம்பன் கழகம், கம்பன் விழாவைச் சிறப்பாக வெளிநாடுகளிலிருந்தெல்லாம் சிறப்பான வர்களை அழைத்துச் சிறப்புச் செய்து விழாக்கொண்டாடுவது வழக்கம். இவ் வாண்டு கொரோனாக் காலத்தில் விழாக் கொண்டாட முடியுமா என்ற ஐயப்பாடுடன் அதிகமானவர்களை அழைக்காமல் குறைந்த எண்ணிக்கையாளருடனே விழாச் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது.

கம்பன் கழகத்துக்காக உழைத்த நல்லிதயம் பாவலர்ஆதிலட்சுமிவேணுகோபல் அவர்கள் மறைவை நினைவு கூறும் வகையில் விழாவுக்கு வந்திருந்தோர் அனைவராலும் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செய்யப்பட்டது.

இசைமாமணி கிருபாபரணன் சிவபாதசுந்தரம் திருமதி மணியன்செல்வி இவர்களின் தமிழிசையுடன் பாவலர் பயிலரங்க மாணவ மாணவியரின் இறை வாழ்த்தும், தமிழ்த்தாய் வாழ்த்தும் பாடப்பட்டுப் பாவலர் நெய்தல்நாடன் வரவேற்புரையைக் கவிதை வடிவில் நிகழ்த்த விழாத்தலைமையைப் பாரிசு பார்த்தசாரதி நிகழ்த்தினார்.

ஆண்டுதோறும் தமிழுக்கு உழைத்த பெருமக்களுக்கு கம்பன் விருது அளித்து மகிழும்கம்பன்கழகம் இவ்வாண்டு பிரெஞ்சு











தமிழ் மொழிபெயர்ப்பாளர் திருமிகு அ. நாகராசன் அவர்களுக்கும், தமிழ் இதழியல் செல்வராகத் திருமிகு தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் விருதளித்துச் சிறப்புற்றது.

கம்பன் விழாமலர் வெளியிடப் பட்டது. அழகிய வண்ணப் பக்கங்களால் அமைந்திருந்தது மிக்க சிறப்பு. மலரினைத் திருமிகு செய மாமல்லன் இலிங்கம் வெளியிடத் திருமிகு செயசீலன் பெற்றுக் கொண்டார்.

பாட்டரசர் கி. பாரதிதாசன் எழுதிய நூல்களிரண்டு வெளியீடு கண்டது. மார்கழித் திங்கள் கவிதை நூலைத் திருமிகு போர். என்செல்வம் வெளியிட முதல் நூலினைப் பாவலர் கவிப்பாவைப் பெற்றுக்கொண்டார்.

வெண்ணிலவே... வெண்ணிலவே கவிதை நூலைத் திருமிகு மீ.கிருட்டினமூர்த்தி வெளியிட முதல் நூலினைத் திருமிகு தீபன் நடராசன் பெற்றுக்கொண்டார்.

இறுதியாகப் பாட்டரசர் கி.பாரதிதாசன் அவர்கள் ‘‘ஆழ்வாரும் கம்பரும்’’ எனும் தலைப்பில் சிறப்பாக உரை நிகழ்த்தினார்.

நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுபெற்றது.

செய்தி :
நிரவி நிலவன்



கம்பன் விருது பெற்ற

## தமிழ் இதழியல் செல்வர்

தமிழ்நெஞ்சம் அமின்
நன்றி நவிலல்!

கம்பரின் பெயரால் இங்கே
கவின்மிகு விருத ளித்தீர்!
விம்மிடும் நெஞ்சத் தாலே
வியத்தகு நன்றி சொல்வேன்!
எம்பெரு மானார் கம்பர்
இனிதுடன் அளித்துச் சென்ற
நம்மெழில் தமிழுக் கன்றோ
நவிலுவேன் நன்றி இன்றே!

கடல்மலை கடந்த போதும்
களிக்கிறோம் தமிழால் தானே
உடல்பல என்றபோதும்
உயிர்க்கிறோம் தமிழால் தானே
தடைபல வந்தபோதும்
தாங்குவோம் தமிழால் தானே
இடையறா நம்மி யக்கம்
இயங்குதல் தமிழால் தானே

இத்தனை தொலைவுக் கப்பால்
எம்மினம் வாழும் போதும்
அத்தனை நெஞ்சத் துள்ளும்
அருந்தமிழ் ஒன்றே வாழும்
வித்தகர் குழுமம் இந்த
வியன்றமிழ் மேடை யேற்றிச்
சொத்தெலாம் வழங்கி னாற்போல்
உளந்தொழ விருது தந்தீர்!

ஆவலாய் வரும்மா ணாக்கர்
அருந்தமிழ் பாக்கள் யாவும்
பாவலர் அரங்கின் மூலம்
பயின்றிட உதவும் ஆசான்
சேவலாய் மயிலாய் வந்து
செந்தமிழ் மொழிக்கு நல்ல
காவலாய்த் தமிழுக் கான
கவிக்கடல் பாட்டின் வேந்தர்

கூடிய பெரியோர் மற்றும்
குலவிடும் சீடர் கூட்டம்
பாடியே மனத்தை வெல்லும்
பைந்தமிழ்க் கவிக ளுக்கு
நாடியே நானும் வந்து
நல்குவேன் நன்றிப் பாக்கள்!
ஈடிலாத் தமிழைக் கொண்டே
இயம்புவேன் நன்றி நன்றி!

# இணையவழிக் கல்வி

இணைய வழிக்கல்வி
இணையமுடியா சூழலில்
இருப்பவர்கள் வளர்ச்சியில்
இல்லாதவர்கள் தளர்ச்சியில்!
இதயம் ஏங்குகின்றது
உதயம் தேடுகின்றது
இணையம் தேடித்தேடி
மனது வாடுகின்றது!

கஞ்சிக்கே வழியில்லை
கணினிக்கு என்னசெய்ய?
கருணையுண்டு எம்மிடம்
காசுபணம் இல்லையே
ஆண்டவனும் உதவவில்லை
ஆள்பவர்களும் உதவவில்லை
ஆட்சிசெய்யும் நோய்த்தொற்றில்
அழிந்ததே கனவுகள்!

தேவைகள் மலையாக
கிடைப்பவை கடுகாக
தேடல்கள் நீள்கின்றது
தெரியவில்லை விடிவெள்ளி!
தேனும்பாலும் தெவிட்டா
அமுதும் வேண்டாம்
தேவையானக் கல்விகற்க
திசைகள் தெரியட்டுமே!

எல்லோருக்கும் எல்லாமென்ற
வசனங்கள் வாழ்கின்றதா?
இல்லாதவர்களும் வாழ்ந்திட
வாய்ப்புகள் இருக்கின்றதா
பொல்லாதநோய் ஒழிந்து
புத்தொளி பிறக்கட்டும்!
கல்லாமை விலகி
அறிவுதீபம் ஒளிரட்டும்!

கவிதா அசோகன்
திருச்சி



# விந்தை மனிதர்கள்

கலைந்திடும் கனவுகள் காட்டிடும் உண்மைகள்
அலைந்திடும் உள்ளங்கள் உருகிடும் பேச்சுகள்
வலைவீசியே பிடித்திட வட்டமிடும் பருந்துகள்
கலைந்திடும் வேடங்கள் கண்டிட மௌனங்கள்
நிலையில்லா உலகில் நித்தமும் முகமூடிகள்

விந்தை மனிதரின் வித்தைகள் ஆயிரம்
பந்தென நினைத்து பம்பரம் ஆடுவார்
அந்தரத்தில் நின்றே அவனியை அழித்திடுவார்
நொந்தவரைத் தேடி நோகவைக்கும் தந்திர நரிகள்

அரிதாரம் தேவையில்லை அகங்கார குணமுண்டே
தரித்திடும் வேடம் தம்பட்டம் அடித்திட
வரிப்புலியென வளைந்திடும் வனப்பான பூனைகள்
நரிவேடம் கலைந்திட நடிக்கும் கயவர்கள்

தன்னலம் மறந்து தரணியாளும் சிற்பிகள்
வன்மத்தை வென்றே வழிகாட்டும் வள்ளல்கள்
என்றும் தொடர்கதை எதிலும் விந்தைகள்
நின்று நிதானித்துநீயும் நடைபயில எழுந்திடு

**றூபா அன்ரன்**
சுவிஸ்



## ஹைக்கூ

### அந்தாதி

கோவில் கோபுரம்
அழகு கண்ணைப் பறிக்கிறது
தாமரைத் தடாகம்

தாமரைத் தடாகம்
தாவிக் குதித்துக் கொண்டிருக்கிறது
தவளை

தவளைச் சத்தம்
இரவெல்லாம் கேட்கிறது
இடி முழக்கம்

இடி முழக்கம்
உடனே ஓடிப் பதுங்குது
நாகம்

நாகம் வரவும்
மெல்ல மெய் சிலிர்க்கிறது
மல்லிகைக் கொடி

மல்லிகைக் கொடி
இரவில் மொட்டவிழ்கின்றன
பன்னீர் பூக்கள்

பன்னீர் பூக்கள்
தோட்டத்தில் பரவிக் கிடக்கின்றன
கட்டெறும்புகள்

கட்டெறும்புகள்
கால் வைத்ததும் கடிக்கின்றன
கதறுது குழந்தை

கதறுது குழந்தை
பதறியபடி ஓடி வருகிறார்
பூசாரி

பூசாரி
பூ பறித்தபடி பார்க்கிறார்
கோவில் கோபுரம்

ஹேமலதா

## தன்னம்பிக்கை

கடந்த நிமிடம்...
சென்றது....
அடுத்த நிமிடம்
வருவது....
நிகழ் நிமிடத்தை
மாத்திரம் முழுமையாக..
மூழ்கி செதுக்கிவிடு...

நம் தோல்விகளை
போகி பண்டிகையைபோல்
எரித்துவிட்டு....
அந்த சாம்பலை
வெற்றிக்கு உரமாக கொள்...

தோல்வி என்று
அடுத்த கணம்....
நாம் இறப்பதில்லை...
வாழத்தானே போகிறாய்...
அடுத்த நிமிடமே...
போராடு...

சூழ்நிலைகள்தான் உன்னை..
தீர்மானிக்கும்..
சூழ்நிலைகள் உன் இலக்கை
உடைக்கும் சிறைகளாக மாறும்போது
பீனிக்ஸ் பறவையாய்...
மீண்டும் மீண்டும் எழுந்துவிடு....

உலகத்தை சிறுப்புள்ளியாக
நினைத்துவிடு...
பேரண்டத்தில்...
உலகமும் ஒருபுள்ளிதான்..
ஒருபோதும் சிறுப்புள்ளியை
உலகமாக எண்ணிவிடாதே...

அவமானங்கள்..
தோல்விகள்...
எப்போதும் உன் வெற்றிக்கு
எரிபொருள்கள்...

உன்னைப் பற்றிய
அளவுகோள்...
பிறருக்கு உண்டு..
அது இயற்கை...
ஒரு போதும் அதற்குள் நீ...
அடங்கிவிடாதே...

ஜெயராஜ் தேவபிரகாஸ்
சந்திரிகாமம், டயகம
இலங்கை

நேர்காணல்

தமிழ்நெஞ்சம் அமின்



# தொழில்நுட்பக் கல்லூரியில் ஒரு தமிழ்த்தென்றல்

தமிழில் இளங்கலையோ முதுகலையோ பட்டம் பெறாதவர்களே பெரும்பாலும் கவியுலகில் கோலோச்சுபவர்களாக இருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே! அத்தகைய ஒருவரைத்தான் இந்த மாத இதழில் நேர்காணல் செய்யவிருக்கிறோம். ஆம் இவர் நிறைய பட்டங்களைப் பெற்றிருந்தாலும் தமிழில் பட்டம் பெற்றவர் இல்லை. பணிபுரியும் துறை கல்வித்துறையாக இருப்பினும் அங்கும் தமிழ் கற்பிக்கப்படுவதில்லை. இவர் ஆசிரியருக்கான பட்டமும் பயிற்சியும் பெற்றிருந்தாலும் ஆசிரியராகப் பணியாற்ற வில்லை. ஆனால் தமிழ்க் கவிதைகளை யாப்பதில் முன்னணிக் கவிஞர்களில் ஒருவராகத் திகழ்கிறார். ஆயிரம் விருத்தங்களை மிகக்குறுகிய காலத்தில் எழுதி நிறைவு செய்து பிரான்சு நாட்டில் இயங்கிவரும் கம்பன் கழகம் தொல்காப்பியர் இலக்கண மையம் மற்றும் பாவலர் பயிலரங்கம் வழங்கிய பாவலர் மற்றும் பாவலர் ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். ஆம் பாவலர் திரு. இராம வேல்முருகன் அவர்களைத்தான் சந்திக்கின்றோம்.

வணக்கம் இராம.வேல்முருகன் அவர்களே! தாங்கள் பிறந்த ஊரை எப்போதும் பெயரோடு சேர்த்து எழுதுவதால் தங்கள் ஊரைப் பற்றிக் கூறுங்களேன்!

வணக்கம் ஐயா

எங்கள் ஊர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வலங்கைமான். இவ்வூரில் பிறந்ததை நான் மிகவும் பெருமையாக எண்ணுகிறேன். தமிழ்நாடெங்கும் ஓலைச்சுவடிகளைத் தேடி அவற்றைத் தன்தலையிலேயே சுமந்து சென்ற எண்ணற்ற தமிழ்நூல்களைப் பதிப்பிக்கக் காரணமானதமிழ்த்தாத்தாஉ.வே.சாஅவர்கள் பிறந்த உத்தமதானபுரம் வலங்கைமான் வட்டத்தில்தான் உள்ளது. ஆங்கிலேயர்களே வியந்து பாராட்டிய வெள்ளிநாக்கு வீரர் சீனிவாச சாஸ்திரிகள் பிறந்த ஊர் வலங்கைமான். இசைக்கலைஞர்கள் அதிகம் இப்போதும் வாழும் ஊர்; இந்தாண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்படவுள்ள தவிலிசைச்சக்கரவர்த்தி சண்முகம்பிள்ளை நாதசுவரஅரசுதிருமிகுஎஸ்.ஏ.சௌந்திரராசன் பிறந்த ஊர்.

உலகப்புகழ்பெற்ற பாடைக்கட்டி மாரியம்மன் அருள்பாலிக்கும் ஊர். இந்து முஸ்லீம் ஒற்றுமையாக வாழும் ஊர் வலங்கைமான். கிறித்துவப் பள்ளிகள் வழி கல்விப்பணியாற்றிவரும் ஊர் எங்கள் ஊர். செங்கல்லுக்கும் பட்டாசுக்கும் பெயர்பெற்ற ஊர். வடக்கே குடமுருட்டி தெற்கே சுள்ளான் மற்றும் வெட்டாறு பாய்ந்து வளம் கொழிக்க விவசாயம் செழிக்கும் பூமி எங்கள் ஊர். எனவே என் பெயருடன் எப்போதும் நான்பிறந்த ஊரையும் சேர்த்துப் பயன்படுத்துவது என் வழக்கமாகி விட்டது.



பாவலருடன் ஓவியக் கவிஞர் அமுதபாரதியும் தமிழ்நெஞ்சம் அமினாரும்.

உங்கள் பெற்றோர்கள் பற்றி...

என் தந்தையார் இராமலிங்கம் ஒரு சாதாரண உழைப்பாளி. மிகவும் சிரமப்பட்டு என்னைப் படிக்க வைத்து ஆளாக்கியவர். அதிகம் படித்தவரில்லை. இளவயதில் மன்னார்குடியில் அவர் இருந்தபோது தந்தை பெரியார் அவர்களுடன் பழகும் வாய்ப்புகள் கிட்டியதை என்னிடம் சொல்லி யிருக்கிறார். தேநீரகம் உணவகம் வைத்துத் தொழிலாற்றி நொடித்துப்போய் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைத்தவர்.

என் தாயார் சாந்தி எனது இன்றைய முன்னேற்றத்திற்கும் தன்னம்பிக்கைக்கும் காரணமானவர். தன்னைத் தேய்த்து என்னை வளர்த்தவர். ஓரளவு கல்வி அறிவு பெற்றவர். கவிஞர் கம்பதாசன் அவர்களின் தங்கை கிருஷ்ணவேணியின் ஒரே மகள் எனது தாயார். இன்றும் என்னை வழிநடத்திச் செல்பவர்.

பாவலருக்கு கவிஞர் பொற்கைப் பாண்டியன் பொன்னாடைப்போர்த்தி மகிழ்விக்கிறார்.



ஓகோ கவிஞர் கம்பதாசனின் உறவுக்காரர்எனபதால்தான்கவிக்குருதி உங்கள் உடம்பிலும் பாய்கிறதா? அப்படி எண்ணுகிறீர்களா?

அப்படியெல்லாம் நான் எண்ணுவதில்லை. நான் இந்த செய்தியையே சென்ற 2019 ஆகஸ்டு திங்களில்தான் வெளியில் சொன்னேன். என் மீது எந்த நிழலும் சாயலும் படிந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக உள்ளவன் நான். எனக்கென்ற அடையாளத்தை நிரூபித்த பிறகே அச்செய்தியை வெளியிட்டேன். இரத்த பந்தம் உள்ளதால் மரபுவழியாகக் கூட எனக்கு அந்தத் திறன் வந்திருக்கலாம்.

தங்கள் இளமைக்காலக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி குறித்து....

நான் த.சு.லு.தி. தொடக்கப்பள்ளியில் 5 ஆம் வகுப்பு வரையிலும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை வலங்கைமான் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலும் படித்தேன். இளமறிவியல் மற்றும் முதுஅறிவியல் விலங்கியல் படிப்பை தென்னிந்திய கேம்பிரிட்ஜ் எனப்படும் கும்பகோணம் அரசினர் ஆண்கள் கல்லூரியில் பயின்றேன். கல்லூரியில் விலங்கியல் துறையில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றவன். இளங்கல்வியியலை சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் கற்றுத் தேர்ச்சி அடைந்தேன்.

ஆசிரியர் பயிற்சி நிறைவு செய்துவிட்டு ஏன் ஆசிரியராகப் போகவில்லை.?

ஏன் போகவில்லை? பயிற்சி முடித்தவுடன் கும்பகோணத்தில் ஒரு தனியார்பள்ளியில்முதல்வராகஇரண்டரை ஆண்டுகள் பணியாற்றி உள்ளேன். அப் பள்ளி 100 சதவீத தேர்ச்சி பெற நானும் காரணமாக இருந்துள்ளேன். பிறகு எனது குடும்பத்தின் சூழல்காரணமாக ஏதாவது ஒரு அரசு வேலைக்குச் சென்றால் நலம் என எண்ணியதால் தேர்வு எழுதி தற்போதைய




சந்ரோதயம் கவியரங்கில் கவிஞர்கள் சூழ பாவலர் இராம வேல்முருகன்.

துறைக்குப் பணிக்கு வந்துவிட்டேன். அரசின் கொள்கை முடிவுகளால் எனக்கு ஆசிரியர் பணி கிடைக்காமல் போய்விட்டது. அதற்காக ஒரு சிறு வருத்தம் இருப்பினும் தற்போதைய வேலையை விருப்பமுடனே செய்து வருகிறேன்.

**உங்களுக்குள் இருந்த கவிஞரைக் கண்டறிந்தவர் யார்? உங்கள் முதல் கவிதை எப்போது எழுதினீர்கள்?**

வழக்கம்போல் தமிழாசிரியர்தான். நான் பள்ளியில் படிக்கும் போது இலக்கியமன்றச் செயலாளராக அந்தத் தமிழாசிரியர்தான் நியமித்தார். எனது கையெழுத்து அழகாக இருந்ததால் தீர்மானங்கள் எழுதவும் வகுப்பில் முதல்மாணவனாக இருந்ததாலும் எனக்கு அந்த வாய்ப்பு கிட்டியது. ஒரு பொங்கல் விழாவின் போது கவியரங்கம் ஒன்று இலக்கிய மன்றத்தின் சார்பில் நடத்தப்பட்டது. மாணவர்கள் சார்பில் நான் கலந்து கொண்டேன். விடுதலைப் போராட்டம் பற்றி நான் எழுதியதே முதல் கவிதை என்றாலும் அது நீளமாக இருந்ததால் மஞ்சள் இஞ்சி கரும்பு என்று சிறுசிறு கவிதைகளாக எழுதச் சொன்னார் எங்கள் தமிழாசிரியர் திரு வ.கலிய மூர்த்தி அவர்கள். நானும் அவ்வாறே செய்து கவிதை வாசித்த போது எனக்கு வயது 13. ஆனால் கவிதைதான் இப்போது ஞாபகமில்லை.

**கல்லூரிக் காலங்களில் கவிதை எழுதியது உண்டா? ஏதேனும் மறக்க இயலாத சம்பவங்கள் உண்டா?**

கல்லூரிக் காலங்களில் கவிதை எழுதாமல் இருந்திருக்க முடியுமா? நானும் கல்லூரியில் படிக்கும் போது கவிதை என்ற பெயரில் ஏதேனும் எழுதியதுண்டு. என்ன ஒரு பெரிய வேடிக்கையென்றால் நான் எழுதிய கவிதைஏட்டைக் கல்லூரி மலர் தயாரிக்கும் குழு பொறுப்பு ஆசிரியரிடம் வழங்கிவிட்டுத் திரும்பப் பெறவில்லை.



கும்பகோணத்தில் நடைபெற்ற குறள்மலை மாத இதழ் வெளியீடு விழாவில்...
கவிஞர் கோவிந்தராசன் பாலு, குறள்மலை நிறுவனர் பா. இரவிக்குமார்,
காஞ்சிபுரம் நடராச சாஸ்திரிகள், பாலசுப்பிரமணியன், நீதியரசர் கிருபாகரன்,
ராபாஸ் கோவிந்தராசன், சியூபி பாலசுப்பிரமணியன், திருப்பூர் கேபிகே செல்வராசு
ஆகியோருடன் பாவலர் இராம வேல்முருகன்.

இன்னொரு ஏட்டை நண்பரின் தங்கை ஒருவரிடம் கொடுத்துவிட்டு அவர் திரும்பத் தரவில்லை என்பது இன்னொரு வேடிக்கை.

மறக்க இயலாத சம்பவம் சைதாப் பேட்டையில் படித்த போது நடைபெற்றது. கவிஞனாக எனக்கு மேடையில் அங்கீகாரம் கிடைத்தது சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில்தான். ஆசிரியர் தின விழாவில் எனக்கு நன்றியுரை வழங்கும் பொறுப்பு. நன்றியுரைக்கெல்லாம் நாற்காலிகள் காலியாகும் சூழலில் கவிதையால் ஆன எனது நன்றியுரையால் மறக்க இயலாத விழாவானது. அப்போது ஒருநாள் மாலை என்னைத்தேடி கல்லூரி முதல்வர் திருமதி கிருஷ்ணவேணி அருணாசலம் அவர்கள் விடுதிக்கு வர நாங்கள் வழக்கம் போல் மாலை நேரங்களில் சென்னையைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டுவிடஅவர்நீண்டநேரம்காத்திருந்து விட்டுச் சென்றுவிட்டார். மறுநாள் காலை பயந்துகொண்டே அவர் அறைக்குச் செல்ல ஒரு வாழ்த்துக்கவிதை எழுத வேண்டித்தான் தேடி வந்ததாக முதல்வர் சொல்லச் சற்றே பயம்தெளிந்து மகிழ்ச்சியானேன். எங்கள் கல்லூரி திருவல்லிக்கேணி என்.கே.ட்டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை வாழ்த்துவது போன்ற கவிதை. அன்றே எழுதிக் கொடுத்து அவரது பாராட்டைப் பெற்றது மறக்கவியலாத நிகழ்வே.

**உங்கள் முதல் கவிதை எந்த இதழில் பிரசுரமானது? பிரசுரமான இதழ்கள் எவையெனச் சொல்ல முடியுமா?**

எனது முதல் கவிதை 1992ல் மாலைமுரசில் வெளியானது. தென்னாப்பிரிக்கா அதிபரான போது நெல்சன் மண்டேலா குறித்து நான் எழுதிய கவிதை. அதன் பிறகு தினமலர் - வாரமலர், பாக்யா வார இதழ், குண்டூசி மாதஇதழ், ஓம் சக்தி மாதஇதழ், கவிதை மாதஇதழ், ஏழைதாசன், தும்பை, ராணி வார இதழ் உள்ளிட்ட இதழ்களில் சுமார் 100க்கும் மேற்பட்ட கவிதைகள் வெளியாகியுள்ளன. 2000 வரை எனது கவிதைகள் பத்திரிகைகளில் வெளியாகின.



அதன்பிறகு எழுதவில்லையா?

ஆமாம் அதன் பிறகு குடும்பவாழ்வில் ஈடுபட்டதாலும் பணிநிமித்தமாக வெவ்வேறு ஊர்களில் பணியாற்றியதாலும் எழுத இயலாமல் போய்விட்டது. கவிதை எழுதுவதே மறந்து விட்டது எனலாம்.

எப்போது மீண்டும் எழுதத் தொடங்கினீர்கள்?

முகநூலில் வந்த பிறகுதான் மீண்டும் எழுதத் தொடங்கினேன். குறுகிய காலத்தில் மிகப்பெரிய வரவேற்பு கிட்டியது. திரு பாலு கோவிந்தராசன் அவர்களுடைய தொடர்பு எனக்கு பலருடைய நட்பை ஏற்படுத்திக் கொடுத்தது. நிலாச்சோறு என்ற குழுமத்தில்தான் எனக்கான அங்கீகாரம் முதலில் கிடைத்தது. பின்னர் நிலாமுற்றத்தில் இணைந்த பிறகு எனது வளர்ச்சி மேலும் அதிகமானது. அதன் பொறுப்பாளராக அங்கீகரிக்கப்பட்டு இப்போது அதன் செயலாளராகவும் செயலாற்றி வருகிறேன். சுவாமிமலையில் நடைபெற்ற நிலாமுற்ற இரண்டாமாண்டு விழாவில் நீர்விழி ராகம் எனும் நூலை வெளியிடுமளவுக்குக் கவிதைகள் எழுதிவிட்டேன். முகநூல் எனது கவிதைப் பயணத்தில் இரண்டாவது அத்தியாயம் என்றால் அது மிகையல்ல.

நிலாமுற்றத்தில் தங்கள் செயல்பாடுகள் குறித்து..

நிலாமுற்றம் என்ற முகநூல் குழுமம் ஒரு தமிழ்ச்சங்கம் போலச் செயல்படும் ஒரு அமைப்பு. இதன் நிறுவனர் திரு முத்துப்பேட்டை மாறன் சிங்கப்பூரிலும் தலைவர் திருமிகு சோதி செல்லத்துரை டென்மார்க்கிலும் கௌரவத்தலைவர் திருமிகு பாலு கோவிந்தராஜன் தமிழகத்திலும் இருந்து இயக்கும் இந்த அமைப்பின் செயலாளராக நான் பணியாற்றுகிறேன். நூற்றுக்கும் மேற்பட்ட பொறுப்பாளர்களைக் கொண்டு ஒரு பெரிய நிறுவனம் போலச் செயல்படும் அமைப்பு. புதுக்கவிதை ஹைக்கூ மரபுக்கவிதை முதற்சொல்கவிதை எனக் கவிதைகளில் மட்டுமில்லாது சிறுகதை மேடைப்பேச்சு எனப் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளித்து வருகிறது.

இதனுடைய இரண்டாம் ஆண்டுவிழா முதல் நான் இவ்வமைப்பில் செயல்பட்டு வருகிறேன். 200ஆவது கவியரங்கை வலங்கையில் 200 கவிஞர்களைக் கொண்டு

பணியாற்றும் வலங்கைமான் அரசினர் பல்கலை தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் திரு கு. தமிழரசு மற்றும் துறைத் தலைவர்களுடன்





தேனீயில் நடைபெற்ற பொற்கைப் பாண்டியன் கவிதாமண்டல நிகழ்வில் கவிஞர்கள் பொற்கைப் பாண்டியன், அனுராஜ், சித்தார்த்பாண்டியன் மற்றும் தொல்காப்பியனுடன்...

நடத்தினேன். மரபுக்கவிதைகளை எழுதுவதற்குப் பயிற்சி அளித்து வருகிறேன். சுமார் 50 கவிஞர்கள் 30க்கும் மேற்பட்ட மரபுக் கவிதைகளை யாப்பதில் வல்லவர்களாகியுள்ளனர். இதுவே நிலாமுற்றத்தில் எனது செயல்பாடு.

மரபுக்கவிதை புதுக்கவிதை ஹைக்கூ எனக் கவிதைகளில் பல வகைமைகள் உள்ளனவே அவைபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

அனைத்தும் கவிதைகளே. எவற்றையும் குறைத்து மதிப்பிட இயலாது. மரபுக்கவிதை ஒரு தாய் வீடு போன்றது. இன்னும் சொல்லப் போனால் பண்டிகை தினங்களிலோ திருமண நிகழ்வுகளிலோ நாம் அணிந்து கொள்ளும் பாரம்பரிய உடை போன்றது மரபுக் கவிதைகள். அழகாகவும் கம்பீரமாகவும் வசீகரிக்கக் கூடியதாகவும் இருக்கக் கூடியவை. அவற்றை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். நமது அடையாளமாக விளங்கக் கூடிய திருக்குறள், தேவாரம், நாலாயிரதிவ்ய பிரபந்தம் முதலான நூல்களாகட்டும் நமது பாரம்பரியத்தைக் கடத்தக்கூடிய சங்ககால நூல்களாகட்டும், காலத்தால் இன்றும் நிலைத்திருக்கக் கூடிய காப்பியங்களாகட்டும் அனைத்தும் மரபுக் கவிதைகளால் யாக்கப் பட்டவையே. ஒவ்வொரு கவிஞனும் மரபை அறிந்திருக்க வேண்டும்.

புதுக்கவிதைகள் அவசர காலத்திற்கு அல்லது ஓய்வு நேரங்களில் நாம் அணியும் ஆடைகள் போலத்தான் நான் கருதுகிறேன். ஒருவரது ஆடை இன்னொருவருக்குப் பிடிக்கலாம்; பிடிக்காமலும் போகலாம். ஆனால் ஆடை அத்தியாவசியமானது. எனவே புதுக்கவிதைகளும் இன்று இலக்கிய வளர்ச்சியில் பங்கு பெற்று வருகின்றன.

புதுக்கவிதைகள் எளிதில் புரியக் கூடியவையாக இருக்கலாம்.புரியாத புதிய வார்த்தைகளைப்போட்டுவாசகர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதையே சிறந்த கவிதை என வாதிடுவோரின் பெருக்கம் வருத்தம் தரக்கூடியதே. இந்நிலை மாற வேண்டும். எந்தக் கட்டுக்கும் உட்படாமல் கவிஞனின் விருப்பம் போல் எழுதுவதே புதுக்கவிதை என்றாலும் இதற்கும் சில விதிகளைக் கற்பித்து அதன்படித்தான் இருக்க வேண்டும் எனச் சொல்வது தவறாகவே எனக்குப் படுகிறது.

ஹைக்கூ என்பது ஜப்பானிய வடிவம். இது தமிழுக்கு வந்துவிட்டது. எது சரியான வடிவம் என்று தீர்மானிப்பதிலேயே இன்னும் குழப்பங்கள் நிலவுகின்றன. கற்பனை அற்றனவே ஹைக்கூ என்றாலும் கவிதையில் கற்பனை தேவை என்பாரும் உளர். அசைக் கட்டுப்பாடு உள்ளவை முறையான ஹைக்கூ ( formal hykoos) என்றும் அசைக் கட்டுப்பாடு அற்றவை முறையிலா ஹைக்கூ ( informal hykoos ) எனவும் வகைப் படுத்தப் படுகின்றன. இதற்கென ஒரு கண்டிப்பான வரையறையைக் கொண்டுவந்தால் ஹைக்கூ கவிதைகள் காலத்தால் சிறக்கும் என்பதே எனது கருத்து.

தாங்கள் மரபுக் கவிஞரா? புதுக்கவிதை எழுதுபவரா?

கவிஞர்களில் மரபுக் கவிதை எழுதுபவர் புதுக்கவிதை எழுதுபவர் என்றெல்லாம் பாகுபாடு காண்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது. கவிதை எழுதுபவன் கவிஞன் அவ்வளவுதான். கவிஞன் சொல்லும் செய்திகளை வைத்தே அவனுடைய நிலைத்திருத்தல் தீர்மானிக்கப் படுகிறது.

நான் மரபுக்கவிதை புதுக்கவிதை இரண்டையும் எழுதுபவன். ஹைக்கூ மற்றும் தன்முனைக் கவிதைகளையும் எழுதக் கூடியவனே! பெரும்பாலான கவிதைகள் மரபு வடிவத்தில் உள்ளதால் மரபுக்கவிஞனாகவே மற்றவர்களால் கருதப் படுகிறேன்.

சமீபத்தில் பிரான்சு கம்பன் கழகம் தங்களுக்குப் பாவலர் பட்டம் வழங்கியுள்ளதே! அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பிரான்சு கம்பன் கழகம், தொல்காப்பியர் கழகம் மற்றும் பாவலர் பயிலரங்கத்தில் எனக்குப் பாவலர் பட்டம் வழங்கப்பட்டது. அவ்வமைப்புகளின் நிறுவனர் திரு பாட்டரசர் பாரதிதாசன் அவர்களால் வழங்கப்பட்டது. பாவலர் பயிலரங்கில் பல்வேறு விருத்த வகைகளில் 500 விருத்தங்கள் எழுதினால் பாவலர் பட்டம் வழங்கப் படுகிறது. நானும் 500 விருத்தங்கள் எழுதி அப்பட்டத்தைப் பெற்றுள்ளேன். தற்போது ஆயிரத்தை நிறைவு செய்ய உள்ளேன். விரைவில் விருத்தமாயிரம் புத்தகமாக வரவுள்ளது.

கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழன்னைத் தமிழ்ச்சங்க விழாவில் எழுத்தாளர் பொன்னீலன் அவர்களிடம் விருது பெற்றபோது... அருகில் மருத்துவர் உஷாதேவி அவர்கள.





சுவாமிமலையில் நிலாமுற்றம் இரள்டாம் ஆண்டுவிழாவில் அதன் நிறுவனர் முத்துப்பேட்டை மாறன் மற்றும் சிறப்பு விருந்தினருடன் விருது பெற்றபோது...

தாங்கள் எழுதியுள்ள புத்தகங்கள் பற்றி..

நீர்விழி ராகம் என்ற கவிதை நூலையும் மதுரை மீனாட்சி அம்மன் இருபா இருபஃது, வலங்கைமான்மாரியம்மன்இருபாஇருபஃது, பட்டீச்சுரம் துர்கை மும்மணிமாலை என்ற சிற்றிலக்கிய நூல்களையும் வெளியிட்டுள்ளேன். தமிழமுது, வானமே எல்லை, எது கவிதை, தமிழ்ப்பூங்கொத்து போன்ற கவிதைத்தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளேன். மரபுப்பாமாலை, தொலைந்து போன கவிதை, எழுக தமிழா மற்றும் கவிதைக்கழகு இலக்கணம் ஆகிய 4 நூல்களை விரைவில் வெளியிட உள்ளேன்.

தாங்கள் பெற்றுள்ள விருதுகள் பற்றி.

சுமார் 50க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளேன். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகளும் முகநூல் அமைப்புகளும் வழங்கிய விருதுகள் இவை. ஆனால் எதையும் எனது பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொள்வதில்லை. சமீப காலமாக, பாவலர் என்ற பட்டத்தை மட்டும் பயன்படுத்தி வருகிறேன்.

தாங்கள் என்ன படித்துள்ளீர்கள்?

நான்முன்பே குறிப்பிட்டுள்ளது போல விலங்கியலில் முதுஅறிவியல் பட்டம் மற்றும் கல்வியியலில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளேன். பணியில் சேர்ந்த பிறகு நூலக அறிவியல் வரலாறு மற்றும் வணிக மேலாண்மை (மனிதவளமேம்பாடு) ஆகியவற்றில் முதுகலைப் பட்டங்கள் மற்றும் இலண்டன் காமன்வெல்த் அமைப்பின் இளைஞர் வளர்ச்சியில் ஒரு சர்வதேச பட்டயம் பெற்றுள்ளேன்.

நான் படித்ததற்கும் பணிக்கும் தொடர்பில்லாத ஒரு அரசுப் பணியில் உள்ளேன்.

தற்போதைய பணி தங்களுக்கு மன நிறைவைத் தரவில்லையா?

அப்படிச் சொல்லிவிட முடியாது. நான் தற்போது ஆற்றும் பணியை எந்தவிதமான குறையும் இன்றி மனநிறைவுடனே செய்கிறேன். எனது பொருளாதாரத் தேவைகளை நிறைவுசெய்யும் அளவுக்குப் போதுமான ஊதியம் தரும் பணி. எனக்கு இன்னொரு முகத்தைத் தரும் பணி. நிறைய அனுபவத்தை உலகியல் அறிவைத் தரும் பணி. அவ்வப்போது ஆசிரியாகவும் வாய்ப்பு கிடைக்கும் போது பணியாற்றுகிறேன். நான் தற்போது தமிழக அரசு தொழில்நுட்பக் கல்வித்துறையில் முதல்வரின் நேர்முக உதவியாளராகப் பணியாற்றி வருகிறேன்.

கல்லூரியில் எவ்வாறு தமிழ்ப்பணி ஆற்றி வருகிறீர்கள்?

இது கொஞ்சம் சிரமமான கேள்விதான். நான் பணியாற்றும் கல்லூரி தொழில் நுட்பக் கல்லூரி. பொறியியற்பாடங்களை நடத்தும் கல்லூரி . இங்கு தமிழ் ஒரு பாடமே அல்ல. ஆங்கிலம் உண்டு. ஆங்கிலவழிக் கல்வி. எனவே தமிழ்ப்பணி என்பது கேள்விக்குறிதான் என்றாலும் என்னால் இயன்ற அளவு செய்து வருகிறேன். மாணவர்களிடையே கவிதைப் போட்டிகள் நடத்துவது, பேச்சுப்போட்டிக்குப் பயிற்சி அளிப்பது போன்றவற்றைச் செய்வதுண்டு. தமிழ் மன்றம் என்ற ஒரு அமைப்பைத்

தோற்றுவித்து அதனை தமிழ்வளர்ச்சித்துறை துணை இயக்குநர் வழியாகத் தொடங்க உதவி உள்ளேன். கவியரங்கங்கள் நடத்தி வருகிறேன். செந்தமிழ் சொற்பிறப்பியல் இயக்ககம் வழியாக புதிய சொற்களைக் கண்டறியும் கருத்தரங்கம் நடத்த உதவி இருக்கிறேன். பொறியியல் கல்லூரியில் அகரமுதலித் திட்ட இயக்குநரையும் தமிழ்ப் பல்கலைக் கழகத்துணை வேந்தரையும் அழைத்துவந்துநிகழ்ச்சிநடத்தியிருக்கிறேன். மாணவர்களைத் தமிழில் கையொப்பமிடவும் பணியாளர்களை அரசு ஆணையின்படி தமிழில் கையொப்பமிடுவதை வலியுறுத்தி யும் வருகிறேன். இதுவே நான் கல்லூரியில் செய்துவரும் தமிழ்ப்பணியாகக் கருதுகிறேன்.

முகநூல் வழியாக எவ்வாறு தங்கள் தமிழ்ப்பணி உள்ளது?

முகநூல் ஒரு மிகப்பெரிய வரம். மார்க் அவர்களுக்கு ஒரு பெரிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முகநூல் வழியாக என்னால் இயன்ற அளவு மரபுக்கவிதைகளைப் பயிற்றுவிக்கிறேன். நிலாமுற்றம் குழுமம் வாயிலாக மரபுக்கவிஞர்களை உருவாக்கும் மற்றும் வளப்படுத்தும் பணியைக் கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாகச் செய்துவருகிறேன். அவ்வப்போது கவியரங் கங்களில் பங்கு பெற்று வருகிறேன். முகநூலில் வந்த பிறகு தான் நிறைய கவிதைகளை நான் எழுதியுள்ளேன். முகநூல் கவிஞர்களை ஒருங்கிணைத்து குடந்தை வலங்கைமான்



கிருஷ்ணகிரி ஊழளா மற்றும் முத்தமிழ்ச்சாரல் கவியரங்க நிகழ்வில் கவிஞர்கள் கோவிந்தராசன் பாலு, வெற்றிப்பேரொளி ஆகியோருடன் பாவலர் இராம. வேல்முருகன்.

நகரங்களில் கவியரங்கங்கள் நடத்தியுள்ளேன்.

தஞ்சைத்தமிழ் மன்றம் குறித்து...

அது ஒரு விபத்து. ஒரு நண்பர் தஞ்சையில் கவிரயங்கம் நடத்தவேண்டிக் கேட்டுக் கொண்ட போது ஒரு தொடர்பு குழு தொடங்குவதற்கு மாற்றாக தவறுதலாக முகநூல் குழுவைத் தொடங்கிவிட்டேன். அந்தக் கவியரங்கம் தஞ்சையில் நடைபெற்ற போது ஏற்பட்ட சில கசப்பான சம்பவமும் மற்றொரு குழுமத்தில் அதன் நிறுவனர் என்னை ஒரு கறிவேப்பிலையாகப் பயன்படுத்தியதன் விளைவும் தஞ்சைத்தமிழ் மன்றம் தோன்றக் காரணமாக அமைந்து விட்டது.ஆனால் இது முகநூல் குழுமம் அல்ல. முகநூலைப் பயன்படுத்தும் அமைப்பு. இதன் முக்கிய செயல்பாடு அந்தந்தப் பகுதியில்

மகாபலிபுரத்தில் கவிஞர்கள் கண்ணன் நடராசன், சிவக்குமார், பழனி, தஞ்சை மயிலரசன், கவிக்கோ துரை வசந்தராசன்,, தேனி தமிழ்ச்சிம்மன் ஆகியோருடன்.



உள்ள இணையத்தைப் பயன்படுத்தாத கவிஞர்களை இளம் கவிஞர்களை மாணவர்களை ஊக்கப்படுத்துவதே ஆகும். திங்கள் ஒருமுறை ஞாயிறு மாலை ஒரு இரண்டு மணித்துளிகள் மட்டும் கவியரங்கம் நடத்துவது. புதிய கவிஞர்களைத் தலைமை யேற்கச் செய்வது. ஆண்டுக் கொருமுறை கவிஞர்களை அழைத்துக் கவியரங்கம் நடத்திச் சிறப்பிப்பது; கம்பதாசன் பெயரில் ஏழு கவிஞர்களுக்கு விருது வழங்குதல்; இசைக்கலைஞர்கள் நாட்டியக் கலைஞர்கள் ஆசிரியர்களுக்கு விருது வழங்குதல்.இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சி நடத்துதல்; கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுதல். இதற்காக கவிஞர் களிடம் எந்தவித நன்கொடையும் பங் கேற்புக் கட்டணமும் பெறுவதில்லை. இதன் தலைவராக எனது ஆருயிர் நண்பர் வழிகாட்டி திரு பாலு கோவிந்தராசன் அவர்கள் உள்ளார். துணைத்தலைவர்களாக நண்பர்கள் ஏவிஎஸ் தேவநாதன் மற்றும் தென்பரை சுப்பிரமணியன் பணியாற்ற நண்பர் வா சண்முகம் அவர்கள் பொருளாளராகப் பணியாற்றுகிறார். வரும் 2021ல் சனவரி அல்லது பிப்ரவரி திங்கள் ஆண்டுவிழாவைப் புத்தகத் திருவிழாவாகக் கொண்டாட உள்ளோம் சுமார் 15க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட உள்ளன.

**தங்கள் எதிர்காலத்திட்டம் என்ன?**

- இலக்கண நூல் ஒன்று எழுதுதல்.
- கம்பரின் வாழ்க்கை வரலாற்றைக் கவிதைநடையில் எழுதுதல்.
- திருக்குறளுக்குக் கவிதைநடையில் உரை எழுதுதல்.
- குறுந்தொகைக்குக் கவிதை நடையில் உரை எழுதுதல்.
- சிற்றிலக்கியங்களை ஆய்வு செய்தல்.
- இளங்கவிஞர்களை ஊக்குவித்தல்.
- வறிய நிலையில் உள்ள கவிஞர்களுக்கு உதவுதல்.
- தமிழன்னைத் தமிழ்ச் சங்கத்து டன் இணைந்து தமிழன்னைக்கு ஆலயம் அமைத்தல்.

**இக்கால இளைஞர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?**

தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

கவியரங்கத் தலைவராக, திரைப்பட இயக்குநர் திரு சிவாஜி, தமிழ்ச்செம்மல் பாரதி ஆறுமுகம், முனைவர் இலக்கியத்தோழன் மற்றும் கவிஞர்களுடன்....



உழைக்கத் தயங்காதீர்கள்; மனத்தை ஒருநிலைப் படுத்திச் செயல்படுங்கள். நீங்கள் நினைத்தை அடைவீர்கள். குறுக்கு வழிகளைக் கடைப்பிடிக்காதீர்கள்; பெற்றோர்களை மதியுங்கள். எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளுங்கள்; ஆனால் தாய்மொழியை மறவாதீர்கள். ஏதேனும் ஒரு வகையில் மொழிக்கும் சமுதாயத்திற்கும் தொண்டு செய்யுங்கள்.

**தமிழ்நெஞ்சம் குறித்த தங்களின் பார்வை...**

இன்றைய காலத்தில் போற்றப்பட வேண்டிய இதழ். சிறிதும் இலாப நோக்கமின்றிச் செயல்படும் இதழ். கவிதைளுக்கும் கவிஞர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வரும் முதன்மையான இதழ். உலகின் எந்த மூலையில் உள்ள கவிஞரானாலும் அவருக்கு நூல் வெளியிட எந்தவிதமானக் கைமாறுமின்றி நூலை வடிவமைத்து வெளியீடு செய்ய உதவும் ஒப்பற்ற அமைப்பு. இது ஒரு அளப்பரிய பணி. கவிஞர்களின் கவிதையை வெளியிடக் கூடக் காசு கேட்கும் உலகில் கைமாறு கருதாமல் தமிழ்நெஞ்சம் செய்யும் பணி மகத்தானது. மென்மேலும் வளர எனது இனிய நெஞ்சார்ந்த வாழ்த்துகள் . ■



சென்னை இக்சா மையத்தில்
நடைபெற்ற ஹைக்கூ 2020
நூல்வெளியீட்டு விழாவில்
தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுடன்
பாவலர் இராம வேல்முருகன்



# அமைதியை தருவாய்

நிலை மண்டில ஆசிரியப்பா

அமைதியும் உலகினில் அனுதினம் வேண்டும
இமைக்குள் புகுந்த இன்னல் அனைத்தும்
நீங்கிட வேண்டும் நிம்மதி வேண்டும்
தாங்கும் சக்தியைத் தந்தருள வேண்டும்
பணமும் பகட்டும் பலன்தர முடியாக்
கணப்பொழு தினிலே காலம் செல்ல
உறவும் உயிரும் உணரா வகையினில்
சிறப்பிலா நிலையில் சீர்மையும் குலைந்தே
ஒருகுடைக் கீழே ஒன்றிய . சந்ததி
திருமறை ஓதுவோம் திருப்புகழ் பாடுவோம்
தொற்றும் நம்மைத் தொற்றா வண்ணம்
பெற்றுக் கொள்வோம் பெருமையாம் சக்தியை
முற்றும் துறந்த முனிவ. ராயினும்
சற்றும் மனத்தில் சஞ்சல மின்றித்
தரணியை அழிக்கும் தரமிலாக் கிருமிகள்
வரவுமே சரியா வளத்தை அழிக்க
சிந்தனை செய்தால் சிறப்புடன் பதிலினை
விந்தையாய் கிடைக்க விதந்தே சொல்வேன் .
எத்தனை சாதி எத்தனை சமயம்
எத்தனை மொழிகள் எத்தனைப் பொழில்கள்
நித்தமும் வாழ்வினில் நிம்மதி குலைக்க
மொத்தமாய்ச் சேர்ந்து முனைந்தே செயல்படும் .
இயற்கை தன்னை இயல்புடன் மாற்றிடச்
செயற்கை யுணர்வைச் சீராக் கிடவும்
பயத்தைத் தந்திடும் பாரோர் நமக்கே .
வியப்பு மில்லை விந்தை யுலகிலே .
ஆக்கமும் அழிவும் ஆதியின் செயலாம்
ஏக்கமும் நீக்குவார் ஏற்றம் தந்தே .
நாட்டு மருந்து நலத்தைத் தருதல்
வீட்டில் என்றும் விவரம் அறிந்தே
கூட்டுப் பொருளாய் கூட்டாய்ச் சேர்க்க
வாட்டும் நோயின் வாட்டமும் நீக்கி
என்றும் சுகமுடன் என்றும் வாழ
மன்றில் இறைவனை மனத்துள் வேண்டி
நோயின் பிடிதனில் நொடிப்பொழு தும்நாம்
பாயில் சுருளாப் பக்குவ வாழ்வினை
இன்றே தருக இனிதே தருக
என்றும் தருக. எமக்கே தருக .
உலக மக்களின் உன்னத அமைதியை
நலமாய்த் தருக நாற்றிசை யெங்குமே .



**சரஸ்வதி பாஸ்கரன்**

# எனக்கென ஓர் தனிமை



கிறுக்கப்பட்ட
கோடுகளை
சரி செய்ய
எந்த கருவியையும்
தேர்ந்தெடுக்க
முடியவில்லை

வானம்
நட்சத்திரம்
தன்போக்கில் தன்னை
நிலைநிறுத்துகின்றன

நிலா
மேகம்
சூரியன் தன்போக்கில்
நகர்கின்றன என்பதில்
பூமி சுற்றுவதை
மறந்துவிட்டோம்

நிர்ணயிக்கப்பட்ட
காலத்தின்
வரையறைக்குள்
கோணல்மாணலான
கோடுகளை
நிமிர்த்தவே
முதுமை பெற்றுவிடுகின்றது
அனுபவங்கள்

எனக்கென ஓர் உலகம்
எனக்கென ஓர் தனிமை
என்பதில் மௌனித்து
நகர்வதில்
கோடுகளுக்கான புள்ளிகளை
இணைத்துக்
கொண்டிருக்கிறேன்

**கோவை சசிகுமார்**

# தமிழ்!

தலை நிமிர்ந்து வாழ
வைப்பதும் என் தமிழ்!
உயிர் கொடுத்து வாழ
வைப்பதும் என் தமிழ்!

கண்டதுண்டு எந்தன்
தமிழ்மொழி பெருமை..!
பார்த்ததுண்டு எந்தன்
தாய்மொழி மகிமை!

பாரதம் போற்றும் தமிழ்
எங்கள் பெருமை!
பெருமைகள் போற்றும் தமிழ்
எங்கள் அடையாளம்!

தலை குனிந்து நடந்ததில்லை!
தலை நிமிர மறந்ததில்லை!
அந்நியன் முன்னும்
அடிமை என்று நினைப்பவன்
முன்னும்!

எங்கள் தமிழில் என்ன
குறை உண்டு!
எங்கள் தமிழில் எல்லாம்
நிறையவே உண்டு?

வள்ளுவன் கொடுத்த
முப்பால் உண்டு!
கம்பன் கொடுத்த
ராமாயணம் உண்டு!

கண்ணன் சொன்ன
கீதை உண்டு!
அண்ணா கொடுத்த
திராவிடம் உண்டு!

பெரியார் கொடுத்த
சுயமரியாதை உண்டு!
பாரதி கொடுத்த
வீரம் உண்டு!

யான் பெற்ற இன்பம்
சொல்லி மாளாது!
யான் பெற்ற தமிழே என்னை
கொல்லும் ஆயுதம்!

எந்தன் பசி தீர்த்தது
எந்தன் தமிழ்!
எந்தன் தாகம் தீர்த்தது
எந்தன் தமிழ்!
எந்தன் ஏக்கம் தீர்த்தது
எந்தன் தமிழ்!

எமக்கு எல்லாம் தந்த
எந்தன் தமிழிற்கு
எம்மண்ணில் ஏது
அழிவு..?

தமிழ் வெல்க!
தமிழ் வாழ்க!
தமிழ் வளர்க!

**பாரதி**

# கஷ்டமா இருக்குப்பா

கணிதம் படிக்க
கஷ்டமா இருக்குப்பா என்றாய்..
டியூஷன் வைத்தோம்!

மிதிவண்டி ஓட்ட
கஷ்டமா இருக்குப்பா என்றாய்..
ஸ்கூட்டர் வாங்கினோம்!

அவள் இல்லாமல் வாழ
கஷ்டமா இருக்குப்பா என்றாய்..
திருமணம் முடித்தோம்!

கூட்டு குடும்பமாய் வாழ
கஷ்டமா இருக்குப்பா என்றாய்..
முதியோர் இல்லம் வந்தோம்!

இங்கு உங்களை இப்படி பார்க்க
கஷ்டமா இருக்குப்பா என்றாய்..
உயிர் பிரிந்தோம்..

மகனே இன்னும் நீ
உச்சரித்துக்கொண்டே இருக்கின்றாய்
எங்கள் புகைப்படங்களை பார்த்து
கஷ்டமா இருக்குப்பா...

**எஸ். ஜெயப்பிரகாஷ்**
சேலம்

# தம்பி...



திரும்பித்தான் பார்த்திடுவாய் தீர்வுகளைக் கண்டிடுவாய்
இரும்பாக நெஞ்சத்தில் ஏற்றித்தான் வைத்திடுவாய்
கரும்பாகப் பேசிடுவாய் காந்தமாக ஈர்த்திடுவாய்
துரும்பாக எண்ணாமல் தூணாகத் தாங்குவாயே.

தாங்கிடவே துன்பங்கள் தத்துவங்கள் கற்பாயே
ஏங்கிடவே வைத்திடாமல் என்றென்றும் காத்திடுவாய்
நீங்கட்டும் கல்லாமை நீக்கிடுவோம் இல்லாமை
ஓங்கட்டும் பண்புடைமை ஓயாமல் காப்பாயே.

ஏனென்று கேட்பாயே எப்பொருளும் ஆய்ந்திடுவாய்
தானென்ற கொள்கையில் தன்மானம் காத்திடுவாய்
நானென்ற நம்பிக்கை நன்றாக ஏற்பாயே
தேனென்று சொல்லிடவே தீந்தமிழில் பேசுவாயே.



பேசிடுவாய் அன்பாக பெற்றோரின் கீழ்ப்படிவாய்
ஆசிகளும் பெற்றிடுவாய் ஆன்றோர்கள் வாழ்த்திடவே
நேசிப்பாய் சுற்றத்தார் நெஞ்சினிலே ஏற்றமுற
ஏசிடுவார் வீட்டினையும் ஏறெடுத்துப் பார்க்காதே.

பார்வையினில் நேர்கொண்டு பண்புடனே ஏறுநடை
கூர்விழியால் குத்திடுவாய் குற்றங்கள் செய்வோரை
ஏர்கொண்டு சேற்றினிலே ஏற்றமுற பாடுபடும்
சீர்கொண்டு போற்றிடுவாய் செம்மாந்த சொற்கொண்டே.

**கோவிந்தராசன் பாலு,**
கும்பகோணம்.

# நீ... என்றால்... நான்!



•
உன்
நினைவுகள் இல்லாத நாள்
என்
நினைவுநாள்...

•
கூண்டுக் கிளியும்
தொட்டி மீனும்
பேசிக்கொண்டன.....
'அனார்கலியை
உயிரோடு புதைத்து விட்டார்களாமே?'

•
என்னைச் சுற்றி வேலி
உன்னைச் சுற்றி
என் மனசு.

•
உயிரே....
நான் பிறந்த பயனை அடைந்தேன்
உன்னை
மடியிலிட்டுத் தாலாட்டியபோது.

•
நெஞ்சுவலி
டாக்டரை அணுகினேன்
டாக்டரிடம்
உண்மையைச் சொல்லவேண்டுமாமே...
இதயம் என்னுடையதல்ல
அவனுடையது.

•
எனக்கானப் பரிசுப் பெட்டகம்
உனது பிறந்தநாள்.

# உறவுகள்...

உற்ற உறவுகளில் உன்னத உறவு நம்மை
பெற்ற உறவன்றி பிறிதொன்று இல்லையே
முகங்காணா முன்னே முகிழ்த்திடும் உறவு
முடிந்திடும் வரையிலும் தொடர்ந்திடுமே

ஒரே வீட்டில் குடியிருந்து
ஒரே குருதியை பங்கிட்டு உண்ட
அண்ணன் தம்பி அக்கா தங்கை
அன்பு உறவுகள் பாசத்தின் எல்லை

துணையென்று வந்து வாழ்வினில் இணைந்து
துன்பமும் இன்பமும் பங்கென கொண்டு
வேதனை தீர்த்து விழிநீர் துடைக்கும்
இல்லற உறவு அனைத்திலும் உயர்வே

உடுக்கை இழந்தவனின் மானம் காக்க
உடன் செயலாற்றும் கரங்கள் போன்று
சடுதியில் நம் துயர் போக்கிடவே
சகலமும் துணியும் தோழமை உறவு

பெறுவது கருதி பிணைந்திடும் உறவுகள்
பெற்றதை மறந்து பிதற்றிடும் உறவுகள்
வற்றிய குளத்தின் கொக்குகள் போன்றே
கற்றுத் தந்திடும் வாழ்க்கையின் தத்துவம்

வறுமை காலத்தில் விலகிடும் உறவுகள்
வெறுமையானவை என்பது நிஜமே செல்வம்
உள்ள நேரத்தில் நெருங்கிடும் உறவுகள்
கள்ளத்தனம் கொண்டவை கருத்தினில் கொள்க...

**- இர. தர்மாம்பாள்**

# என்னருகே நீ இருந்தால்!

என்னருகில் நீ இருக்க
தேன்கூடு நீயாகி
தேனீயாய் நானாகித்
தித்திக்கும் தேனருந்த
தத்தித் தாவிடவே
மனமும் தவிக்குதடி !

தேனே என் தெவிட்டாத
திரவியமே உனை உண்ட
வண்டாகிப் போதையிலே
பேச்சும் வரவில்லையடி !

சுற்றுச் சூழல்நிலை மறந்து
அந்தரத்தில் மரக்கிளையில்
ஆடி நிற்கும் ஊஞ்சல் கூட
பஞ்சணையாய்த் தோணுதடி !

பாசமுடன் நீ பேசும்
ஆசை மொழி கூட
புல்லாங் குழலிசையாகி
செவிகளிலே ஒலிக்குதடி
செந்தமிழினிலே கவிபாடி
உனை அசத்திடவே
என் மனது தவிக்குதடி!

தங்கத் தளிர் மேனி
என்மேலே படர்ந்திடவே
தேகமெல்லாம் ஏங்குதடி !

**மருதூர் மௌஜுன்**

# பத்மா

•
வெகுதூரத்தில் இருக்கிறாய்
ஆனாலும் என்ன
எனக்குத் துன்பம் வரும்போது
நான் ஆறுதல் அடைவது
உன்
கற்பனை மார்பில் சாய்ந்து தானே.

•
எனக்குப்
பரிசுப் பெட்டகம்
உனது பிறந்தநாள்.

•
குழந்தையைப் பத்து மாதம்
உன்னை
வாழ்நாள் முழுவதும்.

•
ஆயிரம் ஆயிரம் தொல்லைகள்
ஒரே ஒருநிமிடம்
உன்
தோளைத் தேடுகிறேன்.

•
'நீ
என்னைச் சுற்றி வருகிறாய்
கவிதை
உன்னைச் சுற்றி வருகிறது...'
என்கிறேன் நான்.

•
இப்போது கவிதையை
நானும் சுற்ற ஆரம்பித்து விட்டேன்
உன்னைத்தான் சொல்கிறேன்
நீயே எனக்குக் கவிதையாக!
ஆமாம்... கவிதை ஓர் ஈர்ப்பு இயந்திரம்!

# தியாகி

♥ ஈரைந்து மாதங்கள
எனை சுமந்த அன்னைக்கு பின்
இது வரைக்கும் என் வாழ்வை
தோள் சுமந்த தோழன்

♥ என்னை கருவாக்க சில நேரம்
இன்பம் கண்டார் ..
என்னை உருவாக்க இன்று
வரை எல்லாம் துறந்தார்

♥ இரவெல்லாம் கண்ணீர்
இதழ் எல்லாம் உமிழ் நீர்
அன்று மாடியில் தூங்கும் போது
நிலவை ரசிதேன் -அவர்
மடியிலே தூங்கிய பின்
நிலவை மறந்தேன்

♥ நான் கண்மூடி படுக்கும்
வரை தூக்கம் இழந்தார் - நான்
கால் எடுத்து நடக்கும் வரை
தோளில் சுமந்தார்

♥ மாலையில் கைபிடித்து
மலையோரம் நடப்போம்
அவர் கை பிடித்து போனது
வெறும் பாதை அல்ல

♥ நான் கால் வைத்த முதல்
பள்ளிக்கூடம் அதுவே

♥ நிலவிலே மனிதன் போன
கதைகள் சொன்னார்
நான் நீதியில் வாழ பல
வழிகள் சொன்னார்

♥ அன்று கதிரவன் மறையும்
வரை கால் சென்றது
அந்த காட்சி மட்டும் இன்று
வரை கண்ணில் உள்ளது

♥ உழவாத நிலத்திலே உணவு இல்லை
உருகாத தங்கத்தில் உருவம் இல்லை
ஊதாத குழலுக்கு இசையும் இல்லை
உதை வாங்கா பிள்ளைக்கு
உயர்வும் இல்லை

♥ என்னை அடித்தவுடன்
அழுவது ஆறு கண்கள்
தாயின் கண்கள் எனை
துடைக்க ஓடி வந்தது
தந்தையின் கண்கள்
அழுவதற்கு மறைவில் சென்றது

♥ நான் படிக்காமல் தூங்கி இருந்த
நேரத்தில் கூட - நான்
படிப்பதற்கு தூங்காமல்
வேலை பார்த்தார்

♥ என் எதிர்கால வாழ்கையில்
பூக்கள் வளர
தன் நிகழ் கால வாழ்வையே
பணயம் வைத்தார்

♥ நான் வளரும் வரை
தோளில் தூக்கி வழி காட்டினார்
நான் வளர்ந்த பின்
தோளில் தட்டி வழி அனுப்பினார்

♥ எனை கல்லூரி சேர்க்க உடமை
இழந்தார் - என் கல்விக்கு ஒளி
ஏத்த உடலை வருத்தார்

♥ என் கல்வியின் காசுக்கு தூக்கம்
இழந்தார் - என் கண்ணீரின்
சமயம் எல்லாம் ஊக்கம்
கொடுத்தார்.

♥ தியாகிகள் எல்லாம்
தந்தையாய் ஆகிறார்கள்
பல தந்தைகள் எல்லாம்
தியாகியாய் வாழ்கிறார்கள்

- சூரியப் பிரகாஷ்

# தமிழ்நெஞ்சம் ஏற்கும் பூவாய்...

அன்பென்னும் காதற்பூ நாளும் என்மேல்
அகமகிழச் சூட்டுகிறாய் கண்ணே,என்றன்
இன்பப்பூ தமிழ்நெஞ்சம் ஏற்கும் பூவாய்
எத்தனைப்பூங் கவிதைகளாய், எழுது கின்றாய்
துன்பத்தீ அனல்பட்டு வாடி டாமல்
தொடர்கின்ற வாழ்க்கையெனும் சோலைக் குள்ளே
நன்மைகளை நல்குகிறாய் நிலாக்கா லம்தான்
நானிலமும் படருமென நவிலு கின்றாய்.

அகம்புறமும் இருபுறத்துக் காதல் ஏற்கும்
அகவற்பாத் தமிழ்போல இசையெ ழுப்பிச்
சுகம்புரியும் நேரிசையின் வெண்பாப் போலே
சொல்லுகின்ற நால்வரியில் தேன்நி ரப்பி
வகைவகையாய் விருத்தங்கள் அள்ளித் தந்து
வஞ்சிப்பாச் சொல்லிமகிழ் வஞ்சி, நெஞ்சின்
தொகைதொகையாய்ப் பரணியிலே துள்ளும் இன்பத்
துடிப்புகளைக் களிப்பாவாய்த் தொடர்ந்தாய் பெண்ணே.

இருவரியாய் இதழிங்கே குறளைக் காட்டும்
எழில்முகத்தின், இருகண்கள் வெண்பாப் பாடும்
ஒருமுகமாய்த் திருமுகம்தான் அகவல் சொல்லும்
ஓரணியாய் விருத்தங்கள் பின்னிக் காட்டும்
கருத்தியலோ கலிப்பாவாய் இன்பம் சேர்க்கும்
கண்ணசைவில் இடையெழிலில் நடையின் வண்ணத்
துருத்தாத சந்தங்கள் சிந்தி சையில்
துள்ளிவரும் தமிழ்ப்பாவாய் வாராய் பெண்ணே.

**கவிமாமணி "இளவல்" ஹரிஹரன்,**
மதுரை

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

அக்டோபர் 2020



காலத்தை வென்றெடுத்த காந்தக் குரலோன்
காலனுக்கே மெட்டெடுத்த மாயக் குரலோன்
பட்டி தொட்டியெங்கும் இவன் கீதம் ஒலிக்கும்
பாடும்நிலாவாய் இசை அள்ளித் தெளிக்கும்
தமிழோடு சேர்ந்தே இவன் புகழ் தழைக்கும்
தங்கமகன் இசையாலே இத்தரணி செழிக்க
காற்றுள்ளவரை இக்குரல் கானமிசைக்கும்.
காற்றலைகள் எங்கும் இவன் கீதம் உயிர்க்கும்.